Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-27 | 12-12-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -298

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10930) T.P: 024-222 4247

# கிழக்கில் இராணுவப் புலனாய்வுத்துறையே 'கருணா குழு'வின் பெயரில் செயற்படுகின்றது!

## மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் குற்றச்சாட்டு



(மட்டக்களப்பு)

**கிழக்கில் கருணா குழு என்ற அமைப்பு தற்போது இல்லை. இதன் பெயரில் இராணுவப் புலனாய்வுத்துறையினர் தான் இயங்குகிறார்கள் என்று விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்துள்ளார்.**

கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அண்மைக்காலங்களில் இடம் பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் போர்நிறுத்த உடன்படிக்கையின் படி 60 நாட்களுக்குள் வடக்கு கிழக்குமாகாணங்களில் இருக்கும் ஆயுதக்குழுக்கள் வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும். இதனை இலங்கை அரசாங்கம் அமுற்படுத்தியிருந்தால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இருக்கும் ஆயுதக்குழுக்களையும் தனிநபர்களையும் பயன்படுத்திக்கொண்டு இராணுவப் புலனாய்வுத் துறையினர் இப்படியான வேலைகளில் ஈடுபட்டுவந்ததாகவும் இதன் மூலம் உளரீதியிலான ஒரு போரை (12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுப்பற்றாளர் மூதறிஞர் சொக்கனுக்கு விடுதலைப்புலிகள் இறுதி வணக்கம்



மூதறிஞர் சொக்கன் அவர்களது மறைவுச் செய்தி ஈழத் தமிழ் மக்களை பேரதிர்ச்சியிலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது என அரசியல்துறை விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும், அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்மொழி, இன, சமுதாய மேண்மையை இலக்காகக் கொண்ட நூற்றுக் கணக்கான இலக் கியங்களைப் படைத்து தமிழ் இலக்கிய உலகில் பெரும் புகழ்பெற்று விளங்கிய வர் மூதறிஞர் சொக்கன் அவர்கள். அவரது படைப்புக்களிற்காக பல்வேறு நிறுவனங் களினதும் அமைப்புக்களினதும், பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்ற போதிலும் அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்து தமிழ்ப் பணியாற்றி வந்தார். தமிழ் மொழிப்பற்றும் இனப்பற்றும், மண்பற்றும் கொண்ட மூதறிஞர் சொக்கன் அவர்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## 10,000 பீரங்கிக் குண்டுகள் கொள்வனவில் மோசடி!

யூகோஸ்லேவியாவில் இருந்து சிறிலங்கா இராணுவத்துக்கு கொள்வனவு செய்யப்பட்ட பீரங்கி குண்டுகள் தொடர்பில் மோசடிகள் இடம்பெற்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பயன்பாட்டுத் தன்மை குறித்து சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 10 ஆயிரம் பீரங்கிக் குண்டுகள் பயன்பாட்டுத் தன்மை குறித்து எழுந்துள்ள சந்தேகம் இதற்குக் காரணமாகும். இக்கொள்வனவிற்கு 2 கோடியே 70 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது

இந்த நிலையில் விடயம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்கவை வினவிய போது அவர் பதிலளிக்கையில்;

சட்டதிட்டதிற்கு அமையவே இராணுவத்துக்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதன் கீழ் கடுமையான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன இதற்கிடையில் தற்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை குறித்த (12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே சிறப்புத் தூதுவர் புதனன்று வன்னி வருகை

நோர்வே சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் அவர்கள் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.நாளை இலங்கைவரும்இவர் 15 ஆம் திகதி காலை 11 மணியளவில் கிளிநொச்சியில் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

## க.பொ.த. [சா/த] பரீட்சை நாளை ஆரம்பமாகிறது

(அலுவலகசெய்தியாளர்)

கல்விப்பொதுத்தராதர சாதாரண பரீட்சை நாளை ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 11 இணைப்பு நிலையங்களில் 31 பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை நடைபெறவுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை படை முகாம்களில் அதிரடிப்படையினர் குவிப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறையின் சகல அதிரடிப் படை முகாம்களிலும் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன் அம்பாறை அக்கரைப் பற்றில் உள்ள படைச் சோதனைச் சாவடிகளில் பயணிகள் சோதனைக்குட்படுத்துவது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கோமாரியின் காட்டையண்டிய பகுதியில் அமைந்துள்ள அதிரடிப்படைத் தளத்திலிருந்து படையினர் நிலைகளுக்கு நகர்த்தப்பட்டு வருகின்றனர். அத்துடன் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்களின் காணிகள் வழியாகவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## கல்வீச்சு

கொடிகாமத்தில் நேற்று முன்தினமிரவு சிறிலங்காப் படையினரை ஏற்றி வந்த கனரக வாகனம் ஒன்று இனம் தெரியாதோரின் கல் வீச்சுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது, இரவு 9.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றதாகவும் இதையடுத்து பெருந்தொகையான படையினர் கொடிகாமம் பகுதியில் கல் வீசியவர்களை தேடியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.(28)

## பருத்தித்துறைப் பெண் கொலை தொடர்பாக மைத்துனனும் மற்றொருவரும் கைது

கடந்த வியாழக்கிழமையன்று பருத்தித்துறை, விநாயக முதலியார் வீதிப் பகுதியினில் யுவதியொருத்தி மர்மமான முறையில் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் யுவதியின் மைத்துனன் ஒருவர்உள்ளிட்ட இருவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்கள் இருவர் மட்டக்களப்பிலிருந்து வெளியேறினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமக்குப் பாதுகாப்பு இல்லை எனக்கூறி இரண்டு ஊடகவியலாளர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். இரு தினங்கள் தினக்குரல் செய்தி இதழின் பிராந்திய அலுவலகம் குண்டுத் தாக்குலுக்கு உள்ளானமை மற்றும் தொலைபேசி அச்சுறுத்தல்கள் என்பனவற்றை அடுத்து இவர்கள் நேற்று முன்தினம் காவல்துறையினரின் பாதுகாப்பை கோரியிருந்தனர்.

இந்த நிலையில், இவர்கள் இருவரும் காவல்துறையினரால் நேற்று கொழும்பிக்கு அழைத்து வரப்பட்டுள்ளார் சந்திரபிரகாஸ் மற்றும் சுதந்திர எழுத்தாளரான தில்லை ஆகியோரே கொழும்புக்கு அழைத்து வரப்பட்டவர்களாவர்.ள (32)

## பிக்குமாரின் எதிர்ப்பின் மத்தியிலும் நடந்த இசை நிகழ்ச்சியில் குண்டு வெடிப்பு

### இருவர் பலி; 15 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பு குதிரைப்பந்தையத்திடலில் நேற்று நடைபெற்ற ஹிந்தி திரைப்பட நடிகர்களின் நிகழ் பின் போது மேடையில் குண்டு வெடித்ததில் இருவர் பலியாகினர்15 பேர் காயமடைந்தனர். ஜாதிக ஹெல உறுமய பிக்குகளின் எதிர்ப்பின் மத்தியில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்திலேயே வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற போதும் பின்னர் நிகழ்ச்சி இடம்பெற்றது. 3 மணி நேர நிகழ்ச்சியின் பின் இரவு 11.30 மணியளவில் மேடையில் வெடித்த (12ஆம் பக்கம் பார்க்க)



போராட்டத்தில ஈடுபட்டுள்ள பிக்கு

## வரிவிளம்பரம்

### PHYSICS

.எஸ்.தவபாலன் ஆசிரியரின் A/L பௌதீகவியல் வகுப்புக்கள் 12.12.2004இல் இருந்து சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் (கேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி) நடைபெறும் பணிப்பாளர். (5348)

### ஜோண்கல்வி நிலையம் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

முல்லைவீதி, புதுக்குடியிருப்பு 2005ஆம் ஆண்டுக்கான தரம் 03 தொடக்கம் தரம்-11 வரையான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. காலம் 20.12.2004 திங்கள் பி.ப.3.00 மணி நிர்வாகி.(5058)

### கேக் செய்து கொடுக்கப்படும்

பண்டிகைக்கால,மற்றும் சம்பிரதாய பூர்வவிழாக்களுக்கான சகல வகையான கேக் வகைகளும் விரும்பத்திற்கேற்றபடி செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு சித்திரா,கானான், தருமபுரம்.(4948)

### கலந்துரையாடல்

வேலையற்ற பட்டதாரிகளுக்கான சிறப்புக் கலந்துரையாடல் இன்றுகாலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற உள்ளதால் முல்லைமாவட்டத்திலுள்ள சகல வேலையற்ற பட்டதாரிகளையும் தவறாது சமுகம் தருமாறு பட்டதாரிகள் கேட்டுக் கொள்கிறார்கள். புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளது எனவும் தெரிவித்தார்கள். (20)

# றோலர் படகுகளின் நடவடிக்கையால் மீன்பிடி வலைகளுக்குச் சேதம்

(பூநகரி)

கடந்த சில தினங்களாக குருநகர் றோலர் படகுகள் பள்ளிக்குடா மீனவர்களின் வலைகளை சேதப்படுத்தி வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். யாழ்.கடற்றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர்களுடன் பூநகரி கடற்றொழில் சங்க சமாசத் தலைவர் இதன் பொறுப்பாளரான அச்சுதன் தலைமையில் கூடி வியாழன் , சனி ஆகிய இருநாட்களில் மட்டும் குருநகர் றோலர் படகுகள் தொழில் செய்யலாம் என இணக் கம் காணப்பட்டது. ஆனால் குரு நகர் தொழிலாளர்கள் தினமும் தொழில் செய்து பள்ளிக்குடா கடலில் தொழில் செய்யும் மீனவர்களின் வலைகளைச் சேதப்படுத்தி வருகின்றனர்.

இம்மாதம் 8 ஆம் திகதி பி.பகல் 4.30 மணிதொடக்கம் 7.30மணிவரை றோலர் படகுகளினால் பி.நேசன் என்பவருடைய 5வலைகள் முற்றாகச் சேதமடைந்ததுடன் 3 வலைகளைக் காணவில்லை. அதனால் அவருக்குப் பத்தாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதே போல் வி.மாறன் என்பவரின் 10 வலைகள் சேதமடைந்துள்ளதால் அவருக்கும் பத்தாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வை.லிங்கேஸ்வரனின் 6 வலைகள் சேதம் அடைந்ததால் ஆறாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. லிங்கேஸ்வரன், நியூசன் என்பவருடைய வலைகளைக் குறிப்பிட்ட இலக்க படகே சேதப்படுத்தியதை நேரடியாகக் கண்டதாகவும் அவர்கள் கூறினர். அது மட்டுமன்றி மன்னார் குழைமேட்டு செய்யும் தொழிலாளர்களின் செயற்பாடு அண்மை நாட்களாக அதிகரிப்பதால் பள்ளிக்குடா மீனவர்கள் தொழில் பாதிக்கப்பட்டு மிகவும் வறுமையில் வாடுகின்றனர். (34)

# பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவருக்கு அடையாள அட்டை

(கிளிநொச்சி)

இவ் ஆண்டு கல்விப் பொது தராதர சாதாரண தரப்பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பாடசாலை ஊடாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தும் இதுவரையில் அ.அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் 259368 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை மாணவர்களின் நலனை முன்னிட்டு இம்மாதம் 4,5.11,12 ஆகிய தினங்களில் ஆட்பதிவு திணைக்கள காரியாலயம் திறந்திருக்கும் எனவும் பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு அ.அட்டை கிடைக்கப் பெறாது இருந்தால் அதிபர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டவர்களோ திணைக்களத்திற்கு நேரில் வந்து அடையாள அட்டைகளை பெற முடியும் என ஆட்பதிவுத் திணைக்களஆணையாளர் அறியத் தந்துள்ளார். (15)

# கால் வாய் நோய்த்தாக்கம் முல்லைமாவட்டத்தில் நீங்கியது

முல்லை மாவட்டத்தில் கடந்த பல மாதங்களக கால் நடைகளுக்கு கால்வாய் நோய்த் தாக்கம் ஏற்பட்டிருந்ததால் கால் நடைகளை இடத்துக்கு இடம் மாற்றுதல் ,இறைச்சித் தேவைக்காக வெட்டுதல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டிருந்தது.

தற்போது மாவட்டத்தில் கால் நடைகளுக்கு எதுவிதமான நோய்த்தாக்கங்களும் இல்லையென்பதை மாவட்ட அரச கால் நடை வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் கால் நடைகளை இடத்துக்கு இடம் மாற்றுதல் ,இறைச்சிக்கு வெட்டுதல் போன்றவற்றிக்கு தற்போது எந்த விதமானதடையும் இன்று முதல் இல்லையென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், மருதம் வாணிபத்தினரும் தெரிவித்துள்ளனர். (20)

# நல்லூர் மகாவித்தியாலயத்தில் தேசிய எ.பே. சங்கம நிகழ்வு

தேசிய எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வு கடந்த 9ஆம் நாள் நல்லூர் ம.வி இல் பூநகரி பிரதேச எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந.பாலசுப்பிரமணியம் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது. பொதுச் சுடரை நல்லூர் அதிபர் கணேஷ்வரநாதன் ஏற்ற, தேசியக்கொடியை பூநகரி பிரதேச அரசியற்துறை ஈகை வேந்தன் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து ஈகச்சுடரை தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் மகாதேவா ஏற்றிவைத்தார். சிறப்புரையை பூநகரி பிரதேச அரசியற் துறைப்பொறுப்பாளர் ஈகை வேந்தன் ஆற்றினார். தேசிய எழுச்சிப் பேரவைச் செயலரளரின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. (34)

## கால எல்லை நீடித்தல் பற்றிய அறிவித்தல்

முல்லைத்தீவு மா.சு.சே.பி.ப.பணிமனையில் 14.12.2004இந் திகதி நடைபெறவிருந்த வைத்தியசாலைகளிற்கு உலர் உணவு, சமைத்த உணவு, அழுக்குத் துணிகளை சலவைசெய்வதற்கான கேள்விச் சபை தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெற மாட்டாது.

மேற்படி விண்ணப்பங்களுக்கான கேள்விகள் 2004.12.21ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு கேள்விச் சபையினால் திறக்கப்படும் என்பதனை சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு அறியத்தருகின்றேன்.

வைத்தியகலாநிதி து.வி.ஜெயகுலராஜா,
மா.சு.சே.பி.பணிப்பாளர்,
முல்லைத்தீவு.
(சி-10527)

## கேள்வி அறிவித்தல்

மேற்படி 2004.12.11 ஆம் திகதிய நாளிதழில் வெளியான கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பெற்ற கோதுமைமாவின் அளவு 25 மெற்றிக் தொன் என்பது பின்வருமாறு திருத்தம் செய்யப் பெறுகின்றது.

| மாதம் | கோதுமை மாவின் அளவு |
|---|---|
| 2005சனவரி | 200 மெற்றிக்தொன் |
| 2005 பெப்ரவரி | 200 மெற்றிக்தொன் |
| 2005 மார்ச் | 200 மெற்றிக் தொன் |

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபரும், கிளிமாவட்ட
கேள்விச்சபைத் தலைவரும்,
கிளிநொச்சி மாவட்டம்.
(சி.11025)

## அமரர் சத்தியதர்சன் பூஜிதா பிறந்தநாள் ஞாபகார்த்த



### வலைப்பந்தாட்ட,மென்பந்தாட்ட போட்டிகள்



### 2004 டிசம்பர் 18-23வரை

கனகபுரம் விளையாட்டுக் கழகத்தின் ஒழுங்கமைப்பில் நடாத்தப்படும் மேற்படிபோட்டிகளில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பங்கள், தமிழீழ விளையாட்டுத்துறையில் பதிவு செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்ட கழகங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

01. விண்ணப்பமுடிவு திகதி 16-12-2004 பி.ப 5.00 மணி
02. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- தலைவர்/செயலாளர்
கனகபுரம் விளையாட்டுக்கழகம்
இல-16 கனகபுரம் கிளிநொச்சி.
03. தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பே இல.021-228 5997
04 விண்ணப்பக் கட்டணம்- 500/=மட்டும்
05 போட்டி நடைபெறும் திகதி: 18-12-2004 காலை 9.00 தொடக்கம் 23-12-2004 வரை

குறிப்பு:~

- போட்டிகள் சர்வதேச விதிமுறைகளுக்கமைய நடைபெறும்.
- ஒரு கழகத்திலிருந்து எத்தனை அணியும் பங்குபற்றலாம்.
- மென்பந்தாட்டம் 15 பந்து பரிமாற்றம் கொண்டதாக அமையும்.
- போட்டி அட்டவணை 17-12-2004 அன்றைய ஈழநாதம் மக்கள் தினசரியில் வெளியிடப்படும்.

தகவல்:- த. றெஜிஅலோசியஸ்
செயலாளர்
கனகபுரம் விளையாட்டுக் கழகம்.

(4949)

## சாவு அறிவித்தல்

### இராமலிங்கம் இராமகிருஷ்ணன்

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இராமலிங்கம் இராமகிருஷ்ணன் 11-12-2004 (நேற்று) காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம், பஞ்சவர்ணம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற இராசையா, சேதுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சீதாலட்சுமியின் அன்புச் சகோதரனும், கண்மணியின் அன்புக் கணவரும், சுகுமாரி, பாலச்சந்திரன் (சிறிலங்கா ரெலிக் கொம், யாழ்.), காலஞ்சென்ற மனோகரன், காலஞ்சென்ற உதயலட்சுமி, இராசேந்திரன் (ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி), நேசமலர், தீனதயாளன் (லண்டன்), சிறீதரன் (நிசாந்தன் போராளி), கிருஷ்ணகுமார் (சிவகாமி ஸ்ரோர்), காலஞ்சென்ற கிரிதரன், இதயராசா (கீரோ) - வீரச்சாவு, பூமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளகேசரி (பவளம், விநோ நகைப் பூங்கா), ஜெயந்தி (ஆசிரியை யாழ். சாவகச்சேரி மகளிர் கல்லூரி), திலகம், மகாலிங்கம், லோஜனா (லண்டன்), குமுதினி, தனஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யாழினி, நித்தியகரன் (கொலண்ட்), தமிழினி சிவநேசன், மகிழினி, வேழினி, சுவாதினி, சோபிகா, நிஷாந்தன், தபோதரன், தயானி, தயாகரன், தயாரூபி, தயாராஜி, தயாபரன், மதிவதனன், பிரதீபன், தேனுஜா, ஹேதுஜன், கரிஷன் (லண்டன்), ஹேஷினி ஆகியோரின் அன்புப் பேரனும், நிவேதிகா (கொலண்ட்), சிவதர்மினி, சிவதருண் ஆகியோரின் பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.12.2004 (நேற்று) பிற்பகல் 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்
குடும்பத்தினர்

(சி-11025)

# அமெரிக்காவிடம் இருந்து ஆயுதக்கொள்வனவு ஆக்கிரமிப்பு திட்டத்திற்கல்ல பாதுகாப்புக்கே

-சேக்ரஷீத் அகமது

(இஸ்லாமாபாத்)

**அமெரிக்காவிடம் பாகிஸ்தான் ஆயுதம் வாங்குவது குறித்து இந்தியா கவலைப்படக்கூடாது என்று பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் சேக்ரஷீத் அமகது தெரிவித்தார்.**

இது குறித்து அளித்த பேட்டி ஒன்றில் பாகிஸ்தான் அமைச்சர் சேக்ரஷீத் அகமது மேலும் கூறிய தாவது;

அமெரிக்காவுடன் பாகிஸ்தான் செய்து கொள்ள இருக்கும் உத்தேச ஆயுத பேரம் குறித்து இந்தியா கவலைப்படக் கூடாது. ஏனெனில் தனது தற்காப்பை பலப்படுத்தவே பாகிஸ்தான் முயன்று வருகிறது. தாக்குதல் எதையும் தொடுக்கும் நோக்கம் எங்களுக்கு கிடையாது. எந்த ஒரு நாட்டிற்கும் எதிராக ஆக்கிரமிப்புத் திட்டம் எதும் எங்களிடம் கிடையாது. எங்களது பாதுகாப்பு தேவைக்காகவே அமெரிக்கா விடமிருந்து ஆயுதம் பெற்றுவருகிறோம்.

தனது அண்டை நாடுகளுடன் சமாதானத்தையும் அமைதியையுமே பாகிஸ்தான் விரும்புகின்றது. ஆயினும் சமாதானத்திற்கு நம்பகமான பாதுகாப்பு தேவைப் படுகிறது. பாதுகாப்பு சாதனங்களை பாகிஸ்தானுக்கு விநியோகம் செய்வதால் இந்தப் பிராந்திய மரபு வழியான சமநிலை பாதித்து விடாது. அது ஆயுதப் போட்டியையும் மூட்டிவிடாது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ரெனால்டு ரம்ஸ்பீல்ட் நேற்று முன்தினம் டில்லி வந்திருந்தார். அப்போது அவருடன் பேச்சு நடத்திய பிறகு அமெரிக்காவுக்கு எச்சரிக்கைஒன்றை இந்தியா விடுத்தது. பாகிஸ்தானுக்கு 120 கோடி அமெரிக்க டொலர் பெறு மதியான ஆயுதங்களை அமெ ரிக்கா விற்பனை செய்யும் யோசனை, இந்தியபாகிஸ்தான் இடையே தற்போது தான் உருவாகியுள்ள அமைதி வழி முறையை பாதித்துவிடும் என்று அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

பாகிஸ்தானுக்கு பி.சி 3ரக வேவு விமானங்களையும்,2 ஆயிரம் டாங்கி எதிர்ப்பு டோவ் ஏவுகணைகளையும் பாலரேக்ஸ் ரக பீரங்கிகளையும் விற்பனை செய்ய அமெரிக்கா திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கிறது. கப்பலில் பொருத்தப்படும் பாலரேத்ஸ் ஏவுகணைகள் எதிரி எவுகணைகளை வழிமறித்து அழிக்க வல்லதாகும்.



அமெரிக்க ரோந்துப் பிரிவு வாகனத்தின் மீது ஈராக் தீவிரவாதிகள் நடத்திய கார் குண்டுத் தாக்குதலில் எரியும் இராணுவ வண்டியை அணைக்கும் அமெரிக்கப் படை வீரர் (சம்பவத்தில் இராணுவத்திற்கு எதுவித சேதமுமில்லாத போதும் பொது மகன் ஒருவர் பலியானார்.

## போர்த்துக்கல் பாராளுமன்றம் அந்நாட்டு சனாதிபதியால் கலைப்பு

போர்த்துக்கல் சனாதிபதி அந்நாட்டு பாராளுமன்றத்தை நேற்று கலைத்துள்ளார்.

பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி அங்கு தேர்தல் நடைபெறவுள்ளது. ஆளும் சனநாயக வாதிகள் கட்சி இத் தேர்தலில் தோல்வியடையலாம் என பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எதிர்க்கட்சியிலான சோசலிசவாதிகள் அபிப்பிராய வாக்கெடுப்புக்களின் படி மக்களிடையே ஆதரவைப் பெற்று வருவதாக ரொய்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்போது பேதுறு சஞ்சானோ தலைமையில் உள்ள கூட்டணி அரசு உறுதியான நிலையில் இல்லை எனவும் போர்த்துக்கல் நாட்டின் அபிவிருத்தி வேலைகள் தாமதமாகின்றன என சனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.


## பாகிஸ்தான் சந்தையொன்றில் குண்டு வெடிப்பு பத்து பேர் பலி, 12 பேர் படுகாயம்

பாகிஸ்தான் நகரமான குவெட்டாவில் நேற்று முன்தினம் குண்டொன்று வெடித்ததில் 10 பேர் பலியானார்கள். 12பேர் காயமடைந்தனர். இராணுவ வாகனம் ஒன்றை தகர்க்க வைத்திருந்த அந்த சக்தி வாய்ந்த குண்டு சந்தைப் பகுதியில் வெடித்தாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குண்டுவெடிப்பில் பலியான 10 பேரின் உடல்கள் கொண்டு வரப்பட்டதாக குவெட்டா சிவில் மருத்துவமனை மருத்துவ அதிகாரி டாக்டர் நசீர்கான் தெரிவித்தார். காயமடைந்த 12 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களில் 4 பேர் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

அந்த வாகனத்தில் இராணுவ வீரர்கள் சந்தைக்கு வந்ததாகவும், வாராந்திர கொள் முதலுக்காக அவர்கள் வந்ததாகவும், அதிகாரிகள் தெரிவித்தனர். வாகனம் அருகே அந்தக் குண்டு வெடித்தது. குண்டு வெடிப்பில் இரு இராணுவ வீரர்கள் காயமடைந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ வாகனம் அருகே நிறுத்தப்பட்டிருந்த ஒரு துவிச்சக்கர வண்டியில் அந்தக் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்று வெடிகுண்டு நிபுணர் ஒ நவர் தெரிவித்தார்.



பலூஜா நகரில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள பிராவோ படைப் பிரிவைச் சேர்ந்த முதலாவது பட்டாளியனின் எட்டாவது கடற்படைப் பிரிவினர்.

## ஈராக், குவைத்தில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினருக்கு ஆயுதம்!

(வோஷிங்டன்)

தங்களுக்குப் போதிய ஆயுதங்கள் இல்லை என ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படை வீரர்கள் இராணுவ அமைச்சர் ரம்ஸ்பீல்டிடம் கவலை தெரிவித்துள்ளனர். அவர்களின் கவலைகள் நிவர்த்தியாக்கப்படும். போதிய ஆயுதங்கள் வழங்கப்படும்" என அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவ அமைச்சர் ரம்ஸ்பீல்டு கடந்த இரு தினங்களுக்கு முன்பு குவைத் சென்றார். அங்குள்ள அமெரிக்கப் படை வீரர்களைச் சந்தித்தார். அப்போது எங்களுக்குப் போதிய ஆயுதங்களும், பாதுகாப்பும் இல்லை என அமெரிக்கப்படை வீரர்கள் ரம்ஸ்பீல்டிடம் புகார் கூறினர். இதைக்கேட்ட ரம்ஸ்பீல்டு வீரர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படும். மேலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட அமெரிக்கப் படை வீரர்கள் ஈராக்கில் உயிரிழக்கக் காரணமான பயங்கர வெடிபொருட்களை கையாளத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கூறினார்.

இந் நிலையில் கடந்த வியாழனன்று அமெரிக்காவில் இராணுவ குடும்பங்களின் மத்தியில் பேசிய அதிபர் புஷ் கூறியதாவது, நமது படைகளுக்குப் போதுமான அளவிற்கு ஆயுதங்கள் இல்லை என ஈராக்கில் உள்ள நமது படை வீரர்கள் குறை கூறியுள்ளனர். அவர்களின் கவலைகள் தீர்த்து வைக்கப்படும். தேவையான ஆயுதங்கள் நமது படைக்கு வழங்கப்படும். நான் வெளிநாட்டில் இதே போல் படை வீரராக பணியில் இருந்தால் கூட இராணுவ அமைச்சரிடம் இப்படித்தான் கேள்வி கேட்டிருப்பேன். 'நமது படைவீரர்கள் ஒவ்வொருவரையும் காப்பது நமது கடமை' என்றார்.

கடந்த மாதம் நடந்த அதிபர் தேர்தலின் போது புஷ்சை எதிர்த்துப் பேட்டியிட்ட ஜான் கொரி ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகளுக்குப் போதிய பாதுகாப்பையும், ஆயுதங்களையும் அரசு வழங்கவில்லை என்று புகார் கூறினார். ஆனால் அப்போது புஷ் அதை மறுத்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய காப்புறுதி மோசடி

அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய காப்புறுதி மோசடி ஒன்றை திட்டமிட்டு செயற்படுத்தினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கனட்டிக்கட் என்ற இடத்தைச் சேர்ந்த நிதி முகாமையாளர் மாட்டின் பிரெண்டலுக்கு 17 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்காவிலுள்ள ஐந்து மாநிலங்களில் மோசடிகள் செய்து 20 கோடி டொலர் நிதியை சூறையாடியுள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

களவாடிய பணத்தை மீட்டுக் கொடுக்க தான் உதவுவதாக உறுதியளித்தபின்னர் இவருடைய சிறைத்தண்டனை குறைக்கப்பட்டுள்ளது.

## சுரங்கத்தில் வெடி விபத்து சீனாவில் 33 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் கடந்த வியாழன் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 33 பேர் பலியாகினர்.

சீனாவின் பல்வேறு மாகாணங்களில் நிலக்கரி சுரங்கங்கள் ஏராளமாக உள்ளன. போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் இங்குள்ள சுரங்கங்களில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கில் சுரங்க ஊழியர்கள் பலியாவது வாடிக்கையாகிவிட்டது.

சீனாவின் வடக்குப் பகுதியில் ஷான்சி மாகாணத்தின் யாங்யுயான் நகரில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் நேற்று முன்தினம் வெடி விபத்து ஏற்பட்டது. வெடிவிபத்து ஏற்பட்ட போது 71 தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் இருந்தனர். இதில் 33 தொழிலாளர்கள் விபத்தில் சிக்கி பலியாயினர். சுரங்கம் முழுவதும் விஷ வாயு பரவியுள்ளதால் மீட்புப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. வெடிவிபத்துக்கான காரணம் குறித்து ஆராயப் பட்டு வருகிறது.

## ஐ.நா.செயலர் கொபி அனானுக்கு அமெரிக்க சனாதிபதி புஷ் ஆதரவு

ஐக்கிய நாடுகள் ஐ.நா. பொதுச் செயலர் கொபி அனான் பதவி விலக வேண்டும்என்ற பிரச்சினையில் இதுவரையில் மௌனம் சாதித்து வந்த அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகம் தற்போது வாய்திறந்து ஆதரவு தெரிவித்துள்ளது.

ஈராக் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்ட பின் 'எண்ணெய்க்கு உணவுத்திட்டத்தை ஐ.நா. கொண்டு வந்தது. அதில் ஐ.நா. பொதுச் செயலர் கொபி அனானின் மகன் கோஜோ அனான் முறைகேடுகள் செய்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. ஈராக்குக்கு உணவு விநியோகம் செய்ய கான்ட்ராக்ட் பெற்ற நிறுவனம் கோஜோவுக்கு மாதந்தோறும் லஞ்சப் பணம் வழங்கியதாக தெரியவந்தது.

இதையடுத்து கொபி அனான் பதவி விலக வேண்டும் என்று பலர் பகிரங்கமாகக்கூறினர். ஆனால் அமெரிக்கா தனது கருத்தை தெளிவாக்கவில்லை. ஆளும் குடியரசுக் கட்சி செனட்டர்கள் கூட கொபி அனான் பதவி விலக வேண்டும் என்று பேட்டி அளித்தனர். அது குறித்து புஷ் மழுப்பலாகவே இது வரை பதில் சொல்லி வந்தார். இந் நிலையில் கொபி அனான் பதவி விலகத் தேவையில்லை . அவர் ஐ.நா.பொதுச் செயலாளராக நீடிக்க வேண்டும் என்று அமெரிக்கா திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

### கொபி அனான் பதவிக்கு நெருக்கடி அடுத்த வாரம் வோஷிங்டன் பயணம்

ஐ.நா. செயலாளர் நாயகம் கொபிஅனான் பதவியிலிருந்து விலக வேண்டும் என கூறப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து முதற் தடவையாக அவர் அடுத்த வாரம் வோஷிங்டன் செல்லவுள்ளார். அங்கு அவர் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலை சந்திக்கவுள்ளார்.அத்துடன் ஈராக் சம்பந்தமாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிஸா ரைஸ்சுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளார். அடுத்த மாதம் ஈராக்கில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு ஐ.நாடுகள் ஊழியர்கள் தொடர்பான பிரச்சினைகளை பற்றி கொபிஅனான் ஆராய்வார் என தெரிவிக்கப்படுகிறது.



பிலிப்பைன்ஸ்சில் ஏற்பட்ட மண் சரிவில் கட்டடங்களின் இடிபாடுகளினுள் கண்டு பிடிக்கப்பட்ட இறந்த ஒருவரின் சடலத்தை கிராம வாசிகள் பை ஒன்றினுள் காவிச் செல்கின்றனர்.

# வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் இலட்சத்திற்கும் அதிக பனை மரங்கள் அழிப்பு!

## -'பனைச்செல்வம்' வெளியீட்டு நிகழ்வில் சோ.தங்கன்



(அலுவலக செய்தியாளர்)

எமது வடக்கு- கிழக்கு தாயகப் பிரதேசத்திலிருந்து போரின் அனர்த்தம் மற்றும் ஏனைய அனர்த்தங்களினாலும் 35 இலட்சத்திற்கு மேற்பட்ட பனை மரங்கள் அழிக்கப்பட்டுள் ளது. எமது பெரிய வளம் ஒன்று சிதைக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. சிதைந்து இருக்கின்றது. என்பதை எண்ணும் போது எங்கள் அனைவரது உள்ளங்களில் ஒருவிதமான பயமும், ஏக்கமும் தென்படுகின்றது.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற "பனைச் செல்வம்" நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்துகையில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த பனைவளம் அழிக்கப்படக்கூடாது என்பதும் அதை மென்மேலும் உரு வாக்க வேண்டும் அந்தப் பனைவளத்தை பாதுகாக்க வேண்டும் என்பதில் தேசியத்தலைவர் மிகுந்த கவனத் தோடும் நீண்ட சிந்தனையோடும் செயற்படுபவர் இல்லங் களின் தேவைக்காகவும் ஏனைய தேவைகளுக்கெனவும் பனை வளம் உட்பட ஏனைய மரவளங்களும் அழிக்கப் படுவதை தடுக்கும் முகமாக தேசியத்தலைவரின் பணிப் பிற்கமைய தேவையான மரங்களை தீர்வையின்றி தென்னிலங்கையில் இருந்து இங்கு எடுத்துவர அனும தியளிக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே இந்த வளங்களை பாதுகாப்பது தமிழர் தாயகத திலுள்ள ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும் என்று கூறினார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் தலை மையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக் கேற்றலினைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார் அகவணக்கத்தினைத் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகியது. கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவிகளால் தமிழ் மொழி வாழ்த்து இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த அருள் நிகழ்த்தினார். தலைமையுரையினையடுத்து நூல் அறிமுகவுரையினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நிகழ்த்தினார். தொடர்ந்து வாழ்த்துரையினை கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் கிளி.மாவட்ட உதவி விவ சாயப்பணிப்பாளர் திருமதி. சீ. ஆனந்த நடராசா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், வன்னிமாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் சின்னத்தம்பி உதவி அரசாங்க அதிபர் தலைமை பணிமனை செல்வி. ஜெயராணி ஆகியோர் நிகழ்த்தினர் இதனைத் தொடர்ந்து நூலினை தமிழீழ அரசியல்துறை துணைப்




பொறுப்பாளர் வெளியிட்டு வைக்க கிளி.மாவட்ட தென்னை பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் இராமச் சந்திரன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து நூல்வெளி யீட்டுரையினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப் பாளர் நிகழ்த்தினார் தொடர்ந்து மதிப்பீட்டுரையினை வெளிச் சம் சஞ்சிகை ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார் சிறப்புரை யினை பேராசிரியர் சு.மோகனதாஸ் நிகழ்த்தினார். தொடர்ந்து நன்றியுரையினை வி.ஜி தங்கவேல் நிகழ்த்தினார். (சோ.சு)

## தமிழீழ மாவீரர் நாளில் பிறந்த 27 குழந்தைகளுக்கு சேமிப்பு கணக்கு

தமிழீழ தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு கடந்த நவம்பர் 27 ஆம் நாள் பிறந்த குழுந்தைகளுக்கு கிராமிய அபிவிருத்தி வங்கியால் தளிர் சிறுவர் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.மேற்படி கிராமிய வங்கியின் தளிர்சிறுவர் சேமிப்பு கணக்கில் மாவீரர் தினத்தில் தமிழீழப் பகுதியில் பிறந்தபிள்ளைகள் அனை வருக்கும் இக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்றுவரை 21 குழந்தைகள் இத்திட்டத் தில் இணைக்கப்பட்டுள்ளதாக வங்கியின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (கு)

## -முள்ளியவளையில்- துர்நாற்றம் வீசும் வீதி ஓரக் கழிவுகள்

(முள்ளியவளை)

தண்ணீரூற்று- நெடுங்கேணி பிரதான வீதியில் தண்ணீ ரூற்று நெடுங்கேணி சந்திக்கும் முள்ளியவளை 6ஆம் கட்டைக்கும் இடைப்பட்ட வீதி ஓரங்களில் கழிவுகள் கொட்டப்பட் டுள்ளதால் தொடர்மழையினால் அப்பகுதி சுகாதார சீர்கேடாகவும் துர்நாற்றம் விசுகின்றது.

இதனால் அப்பகுதி ஊடாக செல்வோர் தொடர்ந்தும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர். மேற்படி பகுதியில் வர்த்தக நிலைய கழிவுகள், திருத்தக் கழிவுகள், உண வுக் கழிவுகள் என்பனவற்றுடன் பிரதேச சபையினராலும அப்பகுதியில் கழிவுகள் போடப்பட்டு வருகின்றது. (ஆ)

## திரைப்பட வெளியீட்டுப் பிரிவு தொடர்பகம் திருமலையில் திறப்பு

திருகோணமலையில் நேற்று முன்தினம் திரைப்பட வெளியீட்டுப் பிரிவு தொடர்பகத் திறப்பு விழா இடம்பெற்றது.

மூதூர் பிரதேசத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திரைப்பட வெளியீட்டுப் பிரிவின் முகாமையாளர் தலைமை வகிக்க நிகழ்வுகள் ஆரம்பமானது. முதல் நிகழ்வாக நாட்டுப்பற்றாளர் ரவியின் தாயாரான திருமதி. குணநாயகம் மங்கல விளக்கினை ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாளர் ராதா ஏற்றி வைத்தார். அகவணக்கத்தின் பின்பு சிறப்புரையுயைம் நிகழ்த்தினார். அதற்கான பெயர்ப்பலகையினை திருமலை அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் கஸ்ரோ திரை நீக்கம் செய்துவைத்தார். அதனைத் தொடர்ந்து ரஞ்சன் கட்டடத்திற்கான நாடாவைவெட்டி திறந்துவைத்தார். ஆசிரி யர்கள், கிராம அலுவலர்கள் பொது மக்கள் கலந்து கொண் டனர்.

## வைத்திய நிலையங்களில் மருத்துவர்கள் இல்லை

உடையார்கட்டு, றெட்பானா ஆகிய இரு வைத்திய நிலையங்களில் வைத்தியர் இல்லாத காரணத்தால் பல நூற்றுக்காணக்கான மக்கள் சிரமப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.வாரத்தில் நான்கு நாட்கள் ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகம் எனும் பெயரில் றெட்பானா விலும், வாரத்தில் இரு நாட்கள் அவசரகால சிகிச்சை நிலையமாக உடையார் கட்டிலும், நோயாளர்களுக்கு மருத்துவ சிகிச்சை இடம் பெற்று வருகின்றது.தற்போது உடையார்கட்டு, றெட்பானா பகுதிகளில் அமைந்துள்ள மருத்துவ நிலையங்களில் சேவையாற்றும் வைத்தியர் விடுப்பில் உள்ளதால் பதிலாக வைத்தியர் அல்லாதோர் நோயாளர்களை பார்வையிடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இது நோயாளர்களின் அறிகுறிகளை இனம் காணுவதையோ திருப் திகரமான தீர்வுகளையோ பெறும் வாய்ப்பையோ எட்ட முடிய வில்லை யெனவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.மேற்படி இரு சிகிச்சை நிலையங்களிலும் பல நூற்றுக்கணக்கான நோயா ளர்களின் நலன்கருதி சீரான மருத்துவச் சேவைகளை வழங்க சம்பந்தப்பட்டவர் கள் ஆவண செய்யவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனா. (19)

## கிளி. மாவட்டத்தில் வதியும் 37,000 குடும்பங்களில் 27 ,000 குடும்பங்கள் நிவாரணத்தை நம்பி வாழ்கின்றன

### -கிளி.மாவட்ட அரச அதிபர் தகவல்

(அலுவலகசெய்தியாளர்)

விவசாய பூமியான கிளிநொச்சி மாவட்டத்தில் வதியும் முப்பத்தி ஏழாயிரம் குடும்பங்களில் இருபத்தி ஏழாயிரம் குடும்பங்கள் நிவாரணத்தை நம்பி இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதென்பது வேதனைக் குரியதாகும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி விவசாயத் திணைக் களத்தில் நடைபெற்ற சிறந்த விவசாயி களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் முதன்மை விருந்தின ராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இன்று பல நாடுகள் விவசாயத் தல் தன்னிறைவு பெற்று வரு கின்ற நிலையில் எமது மாவட்டத் தில் சகல வளங்கள் இருந்தும் விவசாயிகள் தொடர்ந்தும் ஒரே மாதிரியான விவசாய நடைமுறை களையே பின்பற்றி வருகின்றனர்.

குறிப்பாக இளைஞர் யுவதி கள் எமது பாரம்பரிய விவசாய செய்கையில் ஈடுபடமுன்வர வேண் டும். அப்படி அவர்கள் முன்வந்து கொம்பனி முறையில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலை ஏற்படும் போது தான் எமது மாவட்டம் விவசாயத்தில் முன் னேற்ற நிலையினை எய்துவதுடன் விவசாயத்தில் தன்னிறைவைக் காணமுடியும்.

எனவே கமக்கார அமைப்புக் கள் அனைத்தும் இதனை கவனத் திற் கொண்டு மேற்படி அமைப்பில் இளைஞர் யுவதிகளையும் இணைத்து விவசாயச் செய்கை யினை சிறந்த முறையில் முன்னெ டுக்க உறுதி பூண வேண்டுமென் றார். (சோ)

## உலக எயிட்ஸ் தின கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதி மாகாணசுகாதார சேவைப்பணி மனையினரால் உலக எயிட்ஸ் தினத்தையொட்டி நடாத்தப்பெற்ற திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு 5000/=,3000/=, 2000/= என்ற வரிசையில் பணப்பரிசில்களும் மேலும் 10 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வர வேற்புரையினை கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி வரவேற்புரையினை நிகழ்த்தினர். வைத்திய நிபுணர் ஜெயராஜா, யுஎன்எச்சி. ஆர் பிரதிநிதி கெற்பெரி ஆகியோர் கலந்து சிறப்புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற வர்களுக்கான பணப்பரிசில்களையும், சான்றிதழ் களையும் யு.என்.எச்.சி.ஆர் கொழும்பு தலைமைச் செய லகப் பிரதிநிதி அனிசுற் வழங்கிக் கௌரவித்தார். (சோ)



## காலபோக நெற்செய்கை மேம்பாட்டிற்கு கிராமிய அபிவிருத்தி வங்கி கடன் வழங்கல்

### பெருமளவானோர் பயனடைவு

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய அபிவிருத்தி வங்கியால் 2004 /2005 காலபோக விவசாயச் செய்கைக்கென கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி கிராமிய அபிவிருத்தி வங்கி கிளையினால் 246 பயனாளிகளுக்கு 51,56,000 ரூபாவும், முல்லைத்தீவு கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையினால் 176 பயனாளிகளுக்கு 36,20000 ரூபாவும்,வவுனியா கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளையினால் 115 பயனாளிகளுக்கு 12,26000 ரூபாவும், மல்லாவி கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளையினால் 112 பயனாளிகளுக்கு 12,50,000 ரூபாவும், முள்ளியவளை கிராமிய அபிவிருத்தி வங்கியினால் 90 பயனாளிகளுக்கு 15,48,000 ரூபாவும், பூநகரி கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையினால் 05 பயனாளிகளுக்கு 50,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமாக 743 பயனாளிகளுக்கு ஒரு கோடியே இருபத்தி எட்டு இலட்சத்தி ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று வங்கி பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (கு)

# போருக்கான தயாரிப்பை அரசு முடித்துக் கொண்டுள்ளது!


சிறிலங்கா அரசாங்கம் மீண்டும் ஒரு தடவை போருக்குத்தயாராகிவிட்டது. அதன் நடவடிக்கைகளும் , பேச்சுக்களும் அதனைத் தெளிவாகவே வெளிப்படுத்துபவையாக வுள்ளன.

அதாவது சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நிலையில் சிறிலங்கா அரசாங் கம் இருப்பதாகத் தெரியவில்லை. அதற் கான சூழ்நிலையும் ஆளும் கூட்டணிக்குள் இல்லை. சமாதானம் பற்றிய பேச்சு உதட்டள விலானதாகவே உள்ளது.

தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர் கள் தனது மாவீரர் நாள் உரையில் இன் றைய அரசியல் யதார்த்தத்தையும், தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற நெருக்கடிகளை யும், சுட்டிக்காட்டியிருந்ததோடு, இதன்நிமித் தம் சிறிலங்கா ஆளும் மற்றும் அரசியற் கட்சிகளிடம் இரண்டு வேண்டுகோள்களை யும் விடுத்திருந்தார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற நெருக்கடி பற்றிக் குறிப்பிட்ட தேசியத்தலை வர் “இடைக்கால தீர்வுமின்றி, நிரந்தரத்தீர்வு மின்றி நிலையான அமைதியுமின்றி,நிம்மதி யான வாழ்வுமின்றி நாம் அரசியல் வெறு மைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக்கிடக்க முடியாது” எனத் தெரிவித்திருந்தார்.

இதற்குத் தீர்வாக தேசியத்தலைவர் சிங்கள அரசியல் கட்சிகளிடம் முன்வைத்த



இரண்டு முக்கிய கேள்விகளில் ஒன்று, இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்பதாக சிங்கள அரசியற் கட்சிகள் (ஆளும்- எதிர்க்கட்சிகள்) இனப்பிரச்சினைக்கு அடிப்படையான காரணி களான தமிழர் தாயகம், தமிழர் தேசியம், சுயநிர்ணயம் என்பன பற்றி அக்கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்பதனை வெளிப்படுத்த வேண்டும் என்பது.

இரண்டாவதாக இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதா? இல்லையா? என உடன் வெளிப்படுத்த வேண்டும். ஆனால், இவ்விரு கோரிக்கைக்கும் சிறிலங்கா ஆளும்தரப்பில் இருந்து உத்தியோகபூர்வ பதிலில்லை.

தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் கோரிக்கைக்கு இதுவரை நேரடி யாகப் பதில் அளிக்காத அரசாங்கத்தரப்பு தகவல் திணைக்களத்தின் ஊடாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில், இனப்பிரச் சினையின் அடிப்படைகள் குறித்து அரசாங் கத்தின் நிலைப்பாடு என்ன என்பது பற்றிய கேள்விக்குப் பதில் இல்லை. இதேவேளை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப் படையிலான பேச்சுவார்த்தைகளை அது நிராகரித்திருந்தது.

தகவல் திணைக்களத்தின் இவ் அறிக் கையானது அரசாங்கத்தின் அறிவிப்பாகக் கொள்வதற்கு இல்லை என்பது ஒரு புறம் இருக்க, இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தையை நிராகரிக்கும் அரசாங்கத்தரப்பு நிரந்தரத்தீர்வுக்கு அடிப் படையாக அமையக் கூடிய தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன பற்றி யும் எதையும் கூற மறுத்துள்ளது. இதன் மூலம் இறுதித்தீர்வு குறித்த இறுதியான முடிவைக்கூட அரசாங்கத்தரப்புக் கொண்டி ருப்பதாக இல்லை.

ஒரு வகையில் அரசாங்கத் தரப்பினர் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் உரை குறித்து திட்டமிட்டு மௌனம் சாதிப்பதாகவே தெரிகின்றது. இம்மௌன மானத்திற்கு இவ்வுரை குறித்துக் கருத்துக் கூறுவதை ஆளும்தரப்பு தவிர்த்துக் கொள்ளு தல் வேண்டும் என்ற மேல்மட்ட அறி வுறுத்தல் காரணமாகயிருத்தல் வேண்டும்.

ஆனால் தேசியத்தலைவரின் உரைக்கும், கேள்விகளுக்கும் பதில் அளிக்காது போனாலும், சிறிலங்கா ஆட்சியாளர்கள் போருக்குத் தயாராகி வருகின்றார்கள் என்ப தும், அதற்கான முழு அளவிலான செயற் பாட்டில் இறங்கியுள்ளனர் என்பதும் அவர் களின் நடவடிக்கையிலிருந்து வெளியா கிறது.

சிறிலங்கா ஆட்சியாளர்கள், சமாதானக் காலத்தை ஆயுதப்படைத்தரப்பிற்குத் தேவையான மூன்று முக்கிய துறைகளில் பயன்படுத்திக் கொண்டுள்ளமை நிதர்சன மானது.

1. நவீன ஆயுதத்தளபாடக் கொள்வனவு
2.இராணுவத்திற்கான பயிற்சித்திட்டங்கள்.
3.சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்பு.

இவற்றின் ஊடாக விடுதலைப் புலி களை மீண்டும் ஒருதடவை இராணுவ ரீதி யில் எதிர்கொள்வதே அரசாங்கத்தின் நோக்க மாகும்.

சமாதான காலத்தில் பெரும் மோதல்கள் எதுவும் இடம்பெறாது இருந்தபோதும் சிறி லங்கா அரசாங்கங்கள் ஆயுதப்படைக்கான செலவீட்டைக் குறைக்கவில்லை. மாறாக, படிப்படியாக அதிகரித்த தொகையே ஒதுக்கப்பட்டது. இந்த வகையில் அடுத்த ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவீனமும் கடந்த ஆண்டைவிட சுமார் 8 சதவீதத் தினால் அதிகரிக்கப்பட்டே உள்ளது.

கடந்த மூன்றாண்டு காலத்தில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு -குறிப்பாக இராணு வத்தரப்பு ஆளணிப் பெருக்கத்திற்கென மேற்கொண்ட முயற்சிகளில் முழு அளவில் வெற்றி கிட்டாது போனாலும், வேறு எதிலும் குறையற்றதாகவே வளர்ந்துள்ளது. இச்சமா தான காலத்தில் இலங்கையின் முப்படை களும் ஆயுததளபாட விடயத்தில் கணிச மான வளர்ச்சியைக் கண்டுள்ளன.

சிறிலங்கா இராணுவத்தரப்பு நவீன டாங்கிகள், பீரங்கிகள் என்பனவற்றைப் பெரி யளவில் கொள்வனவு செய்துள்ளது. இக்காலப்பகுதியில் டாங்கிகளின் பலம் மூன்று மடங்காகவும், ஆட்லறிப் பீரங்கி களின் சூடுசக்தி இரண்டு மடங்காகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத் தேவை கருதி டாங்கிகளுக்கு முன்பதிவும் செய்துள் ளது. சமாதான காலத்தில் ஆயுத தளபாடங் களால் பெருக்குதல் என்பது சமாதானத்தின் மீதான நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடே. இதற்கு இராணுவச் சமநிலையைப் பாது காத்தல் என விளக்கம் அளிக்கப்படினும் கூட, எதிர்காலத்தில் பெருமளவான டாங்கி களுக்கு சீனாவிடம் ‘ஓடர்’ கொடுக்கப்பட்டது மானது நீண்டதொரு யுத்தத்தை நடத்த அரசாங்கம் தயாராகிக்கொள்கின்றதென்றில் லாது வேறு எவ்வாறு கொள்ளமுடியும்.

சிறிலங்கா இராணுவத்தரப்பு மட்டும்தான் ஆயுத தளபாட ரீதியில் வளர்த்தெடுக்கப்பட் டுள்ளது என்பதல்ல. சிறிலங்கா கடற்படை யும், விமானப்படையும் அவ்வாறே வளர்த் தெடுக்கப்பட்டுள்ளன. கடற்படைக்கென அமெ ரிக்கா, இந்தியா என்பனவற்றிடமிருந்து போர்க்கப்பல்களும், கரையோர ரோந்துக் கப்பல்களும் பெறப்பட்டுமுள்ளன. அதே போன்று கடற்படையின் தேவைக்காக நவீன பீரங்கிகளும் பெறப்பட்டுள்ளன.

இந்திய, அமெரிக்க கடற்படையுட னான தொடர்புகளை அதிகரிப்பதன் மூலமே விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியும் என்ற சிந் தனையுடன் சிறிலங்கா அரசுதரப்பு சமாதான காலத்தின் ஆரம்பத்திலிருந்தே அதீத அக்கறை காட்டிவந்தது. இதற்கென ஆரம் பம் முதலே கடற்படைக்கான ஆயுதக் கொள் வனவு முனைப்புப்படுத்தப்பட்டது.

சிறிலங்காவின் விமானப் படையும், இதேபோன்றே வளர்த்தெடுக்கப்பட்டுள் ளது. அண்மையில் வெளியாகியுள்ள அமெரிக்க இராணுவ ஆய்வாளர்களின் கருத்துப்படி சிறிலங்கா விமானப்படை தனது ஆட்பலத்தை இருமடங்காக அதிகரித் துள்ளது எனத் தெரிவிக்கும் அவர், இருபது புதிய விமானங்களையும், எம்.ஐ.35 ரக உலங்கு வானூர்திகள் 10 ஐயும் , மேலும் போக்குவரத்து விமானங்கள் 10ஐயும் வாங்கியுள்ளது. இதன் மூலம், தாக்குதல் உலங்குவானூர்திகள் இருபத்தி நான்காக அதிகரிக்கப்பட்டுள்ளதென தெரிவிக் கின்றனர்.

இதேசமயம், சிறிலங்காவின் முப்படை களும் இம்மூன்றாண்டுக் காலப்பகுதியில் பல்வேறு பயிற்சித்திட்டங்கள் மூலம் பயிற்று விக்கப்பட்டுள்ளன. உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ள தோடு பயிற்சிக்கென பலர் வெளிநாடு களிலிருந்தும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பும் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டு கடற்படைத்தளபதி வைஸ். அட்மிரல் தயாசந்தகிரி தலைமையிலானதாக உரு வாக்கப்பட்டுள்ளது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மிகவும் வேண்டப்பட்ட வரான தயா சந்தகிரி யுத்தநிறுத்த உடன் பாடு கைச்சாத்தான காலத்தில் ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கடற் படைமேற்கொண்ட பல பாரிய யுத்தநிறுத்த மீறல்களுக்குக் காரணமாக இருந்ததோடு, யுத்தநிறுத்த அமுலாக்கத்திற்கும் இடையூறு களைச் செய்தவர்.

இவையாவற்றிற்கும் மேலாக சிறிலங்கா அரசு வெளிநாடுகளுடன் உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் என்பவற்றின் ஊடாகவும், நேரடியான தொடர்புகள் ஊடாகவும் பாது காப்பு வலைப்பின்னல் மற்றும் நெருக்கமான தொடர்புகள் என்பவற்றை வளர்த்துக்கொண் டுள்ளது. குறிப்பாக அமெரிக்கா,இந்தியா ஆகியவற்றுடனான உறவுகள் மிக நெருக்க மாகியுள்ளன.

இந்தியாவுடன் நெருக்கமான உறவை வைத்துக்கொண்டுள்ள சிறிலங்கா அரசு பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளும் அளவில் முன்னேறியது ஆயினும் இறுதிநேரத்தில் அவ்வுடன்பாடு இந்தியாவின் உள்நாட்டு, அரசியல் சூழ் நிலை காரணமாக தவிர்க்க முடியாத நிலையில் கைச்சாத்தாகவில்லை.

ஆயினும்,சிறிலங்கா அரசும்,அதன் ஆயுதப்படைத்தரப்பும் இந்தியாவுடன் பாது காப்பு உடன்பாட்டுக்கு ஒத்ததாக நெருக்க மான ஒத்துழைப்பைக் கொண்டவையாகவே உள்ளன. இதன் வெளிப்பாடாகவே சிறி லங்காக் கடற்படையும் இந்தியக்கடற்படை யும் இணைந்து மேற்கொள்ளவுள்ள கடற்படை பயிற்சி நடவடிக்கையாகும்.

இந்தவகையில் கடந்த மூன்று ஆண்டு காலத்தில் தன்னை இராணுவ ரீதியில் வளர்த்துக்கொண்டுள்ள சிறிலங்கா அரசு தாம்மீண்டும் ஒரு தடவை விடுதலைப்புலிகளை போர்முனையில் சந்திக்க முடியுமென நம்பிக்கை கொண்டுள்ளது. இதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடித்துவிடமுடியும் என்றும் கருதுகின்றது.

இதன் வெளிப்பாடே தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு உத்தியோகபூர்வமான பதில் எதுவும் அளிக்காதது மட்டுமல்ல, அது பொருட் படுத்தத்தக்கதல்ல என்பது போன்ற வகையிலும் போரை எதிர்கொள்ள அரசாங் கம் தயார்? என்ற ரீதியிலும் அரசாங்கத் தரப்பில் இருந்து சமிக்ஞைகள் காட்டப்பட் டுள்ளது. அறிவிப்புக்கள் தனியாகஅரசியல் வாதிகளிடமிருந்து மட்டுமல்ல ஆயுதத்தரப் பிலிருந்தும்வெளிவரத் தொடங்கியது.

இதில் முக்கிய அறிவிப்பாக சனாதிபதி சந்திரிகாவிற்கு மிகவும் நெருக்கமாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் அறிவிப்புகொள்ளத்தக் கது. “எமது படைகளை, நாம் ஆளணி களாலும் உயர்ரக ஆயுத வளத்தாலும், உளரீதியாலும் ,உபயங்களாலும் வலுப் படுத்திக்கொண்டே இருக்கின்றோம். வலுப்படுத்தத்தான் போகின்றோம்” என்ற அவரின் அறிவிப்புக்கள் அரசாங்கம் இராணுவரீதியில் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு மேற்கொள்ளும் முனைப்பிற்கான நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் ’சிவப்பு’ எச்சரிக்கை எனின் மிகையாகாது.

அடுத்ததாக ஆயுதப் படைத்தரப்பில் சனா திபதி சந்திரிகாவிற்கு மிக வேண்டப்பட்ட வரும், சனாதிபதி சந்திரிகாவினால் மூன்றாவது தடவையாகவும் பதவி நீடிப்பு வழங்கப்பட்டவரும், வழமைக்கு மாறாக ஒரே தடவையில் மூன்றாண்டுகாலப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டவருமான தற்போதைய முப்படைகளின் பிரதான தளபதியும், கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் கூற்றுக்களும் சிறிலங்கா எவ்வேளையும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தயார்நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள் ளதையே வெளிப்படுத்துவதாயுள்ளது.

கடற்டையின் 54ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையில், “தேசத்தின் இறைமையைப் பாதுகாக்கும் பொருட்டு எமது படையினர் உயர் உசார் நிலையில் உள்ளனர். கடலில் மட்டுமல்லாது நிலத்திலும் எமது படையினரின் சமர் சக்தி விஸ்தரிக்கப்பட்டுள் ளது. அண்மையில் உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப்படைப்பிரிவு கடலிலும், தரையிலும் ஒரே வலுவுடன் செயற்படக் கூடியது. கடந்த காலங்களில் கடற்படையின் சக்தி நன்றாக படைக்கலங்களினாலும் யுத்தக்கப்பல் களினாலும் பலப்படுத்தப்பட்டுள்ளது” எனத் தெரிவிக்கும் தயா சந்தகிரி இத்தகைய வளர்ச்சிக்கு உதவியதாக இந்தியா போன்ற நாடுகளுக்கும் நன்றி கூறத்தவற வில்லை.

இந்தவகையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்த முடிவை தேசியத்தலைவர் கோரியதற்குப் பதிலாக சிறிலங்கா அரசியல் இராணுவத்தரப் பிலிருந்து தமது தயார் நிலைபற்றியும், போரிடும் ஆற்றல் குறித்தும், போரை எதிர்கொள்ளத் தயார் என்ற சவால்களுமே வெளிவந்துள்ளன. இவை சனாதிபதி சந்திரிகாவிடமிருந்து வராதுபோனாலும் சனாதிபதி சந்திரிகாவிற்கு மிக வேண்டிய வர்களிடமிருந்தும், நெருக்கமானவர் களிடமிருந்தே வந்துள்ளது.

சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரம சிங்கவிடம் பறிகொடுத்த அரசாங்கத்தை சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் மூலம் பறித்தெடுத்திருக்கலாம். பின்னர் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைத்தது. பின்னர் அரசியல் பேதங்கள், மிரட்டல்கள் சனநாயக விரோதச் செயல்முறை மூலம் தமது அரசாங்த்தை தற்பொழுது பலப்படுத்திக் கொண்டும் இருக்கலாம். இதன் மூலம் அவருக்கு தன்மீதான



நம்பிக்கை அதிகரித்திருக்கலாம்.

இத்தகைய அவரின் நடவடிக்கைகளுக்கு சனாதிபதி சந்திகாவின் அடாவடித்தனமான அரசியலையும், சனநாயக விரோத வழிமுறைகளையும் எதிர்கொள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவினால் முடியாமல் போனமையும் காரணமாக இருக்கலாம். அன்றி அரசியல் யாப்பில் காணப்படும் ஒப்பந்தங்களைப் பயன்படுத்திக்கொள்ள நீதித்துறையின் மீது அவர் செலுத்திய செல்வாக்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவரது பரிவாரங்களோ எதிர்கொள்ளப் போவது ரணில் விக்கிரமசிங்கவையோ அன்றி சட்டத்தினூடான ஓட்டைகளையோ அல்ல. இவற்றின் மூலம் இராணுவ ரீதியில் தோற்றுப்போனதை மீட்டெடுத்துவிடவும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடித்து விடவும் முடியாது.

கடந்த காலத்திலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் ரட்ணசிறிவிக்கிரம நாயக்கவுக்கும் கடற்படைத்தளபதி தயா சந்தகிரியும் துணைநின்றவர்கள் தான். கடந்தகாலத்திலும் சர்வதேச ரீதியிலும் சிறிலங்கா உதவிகளைப் பெற்றுக்கொண்டு தான் இருந்தது. ஆனால் தற்பொழுது பெறும் உதவி தரத்திலும் தொகையிலும் நவீன மயமானதாகவும்அதிகமானதாகவும் இருக்கலாம். ஆனால் அவற்றைக்கொண்டு இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வொன்றைக் கண்டுவிடலாமென சனாதிபதி சந்திரிகா முயற்சிப்பது இனப்பிரச்சினைக் கான தீர்வை சிக்கலானதாக மட்டுமல்ல இலங்கையின் எதிர்காலத்தையே கேள்விக் குள்ளாக்கிவிடும்.

ஜெயராஜ்

# அரசியல் இலக்குகளை கொண்ட ஊழல் விசாரணைகள்....?

இந்திய அரசியலில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒருவர் குடுமியை மற்றவர் பிடித்தாட்டுவது புதிய விடயமல்ல அந்த வகையில் இரு கட்சிகளும் மல்லுக்கு நிற்பதற்கு புதிய காரணமாகியிப்பதுதான் தெஹல்கா போலி ஆயுத பேர ஊழல்.

கடந்த பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியில் மூன்றாண்டுகளின் முன்பு மிகப் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி சக்கை போடு போட்டது தான் தெஹல்கா போலி ஆயுத பேர ஊழல் ஆனால் அது அப்போதே தண்ணீர் பட்ட நெருப்பாய் அணைந்தும் போய்விட்டது.

ஆனால் இன்று காங்கிரஸ் கூட்டணி எதிர்க்கட்சியாகி விட்ட பாரதிய ஜனதாவின் முன்னைய ஆட்சியில் நடந்த அந்த ஆயுத பேர ஊழலை தூசு தட்டி திரும்பவும் கையிலெடுத்துள்ளது.

அந்த வகையில் பாரதிய ஜனதாவின் முன்னாள் தலைவர் பங்காரு லட்சுமணன் முன்னாள் சமதா கட்சித் தலைவி ஜெயா ஜெட்லி உட்பட ஏழுபேர் மீது சி.பி.ஐ வழக்குப் பதிவு செய்திருக்கின்றது.

இந்த ஊழல் விவகாரம் மீண்டும் மறு பிறவி எடுப்பதையிட்டு பாரதிய ஜனதா கட்சி அதிர்ச்சியின் விளிம்பிற்கு மீண்டும் அன்று போலவே தள்ளப்பட்டுள்ளது எனலாம்.

பங்காரு லட்சுமணன் ஜெயா ஜெட்லி உள்ளிட்டவர்கள் மீதான வழக்குப் பதிவு, ஜோர்ஜ் பெர்ணான்டஸையும் சிக்கலுக்குள் தள்ளிவிடும் என்று தான் எதிர்பார்ப்புக்கள் உருவாகி இருக்கின்றன.

2001 இல் வெளிவந்தவைகள் அனைத்தும் மீண்டும் மக்கள் முன் வரும் என்றும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது போல தான் காங்கிரஸ் அரசு செயற்படுகின்றது போலுள்ளது.

"2001 மார்ச் 13" பாரதிய ஜனதாவின் ஆட்சியில் ஒரு மறக்க முடியாத அதே நேரம் கசப்பான சம்பவங்கள் மக்கள் முன் வந்த நாள் அது.

ஆயுத விற்பனையாளர்கள் என்று கூறிக் கொண்ட தெஹல்கா இணையத்தள பத்திரிகையாசிரியர்கள் பாரதிய ஜனதாவின் ஆட்சியில் பாதுகாப்பு உயர்நிலை மட்டத்தில் நடக்கும் அசிங்கங்களை மக்கள் முன் வெளிக்காட்டிய நாள் அது

2000 ஆகஸ்டில் நான்கு பேர் அடங்கிய குழுவாகவும் 2001 சனவரியில் வேறு குழுவாகவும் தகவல்களை திரட்டியதாக கூறிய தெஹல்கா இணையத்தளம் 270 நிமிட தொலைக்காட்சி,காட்சிகளை மக்கள் முன் கொண்டு வந்தனர்.

அந்த வகையில் பாதுகாப்பு அமைச்சகத்துடன் தெஹல்கா 2070 கோடிக்கு 310டி-90 ரக டாங்குகள், பைனாகுலர் ஏனையவை வாங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக அந்த காட்சிகள் விரிகின்றன.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட உதவியவர்கள் பாரதிய ஜனதா தலைவர் பங்காரு லட்சுமணன் சமதாகட்சித் தலைவர் ஜெயா ஜெட்லி இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்டவர்கள் அறிமுகமில்லாதவர்களான தெஹல்கா இணையதள ஆசிரியர்களை ஆயுத வியாபாரிகள் என்று நம்பியதுடன் மட்டுமன்றி பாதுகாப்பு அமைச்சரின் அதிகாரபூர்வ இல்லத்திற்கும் அழைத்துச் சென்று எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று ரூ.2 இலட்சம் வாங்கியதாக தெஹல்கா அம்பலப்படுத்தி இருந்தது.

ஆனால் கட்சிக்காகவே தான் நிதி திரட்டியதாக பங்காரு லட்சுமணனும் , ஜெயா ஜெட்லியும் சத்தியம் செய்தனர்.

ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடங்கி பணம் கைமாறுவது வரையான ஊழல்களை மக்கள் தொலைக் காட்சிகளில் பார்த்த போது அதிர்ச்சி அடைந்தனர் சம்பந்தப் பட்டவர்கள் பேரதிர்ச்சி அடைந் தனர். வாஜ்பாய் அரசோ கவிழும் என்று கூட எதிர்வு கூறப்பட்ட நாட்கள் அவை.

அது மட்டுமன்றி காங்கிரஸ் ஆட்சியில் தான் போ∴பர்ஸ் பீரங்கி ஊழல் தாண்டவமாடியது என்றும் தமது அரசு வித்தியாசமாக ஆட்சிக்கு வந்தால் செயற்படும் என்றும் கூறியே பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சிக்கு வந்தது.

ஆனால் தெஹல்கா அம்பலப்படுத்திய ஊழல் விவகாரம் வாஜ் பாய் அரசு மீதே சேற்றை வாரிப் பூசி விட்டது எனலாம் காங்கிரஸ் ஆட்சியில ஊழல் ஓட்டைகளை அடைக்கப் பாடுபடப் போவதாக அறை கூவல் விடுத்தவர் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் மறுபுறம் தனது பாதுகாப்பு துறையிலேயே பெருச்சாளிகள் புகுந்து விடக்கூடிய அளவில் பொந்துகள உருவாகியதை அவரால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

இவற்றையெல்லாம் சரிக்கட்ட வேண்டிய நிலைக்கு அப்போதைய வாஜ்பாய் அரசு தள்ளப்பட்டது. அதே நேரம் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்த கூட்டணிக் கட்சிகள் கூட்டணியை முறிக்க முன்வரவில்லை அதற்கு பிரதமர் வாஜ்பாய் மீது இருந்த நம்பிக்கையாக இருக்க முடியும் என்று தான் நம்பப்பட்டது.

ஆனால் திரும்பும் இடமெல்லாம் தெஹல்காவின் புகழ்தான் பேசப்பட்டது. அப்போது வெஸ்ட் எண்ட் இன்டர் நேஷனல் எனும் கற்பனையான ஆயுதவிற்பனை நிறுவனமாக அது ஆடிய நாடகமே ஊழல்களை வெட்ட வெளிச்சமாக்கியதாக புகழின் உச்சிக்கு தள்ளப்பட்டது. எதிர்க்கட்சிகளோ பாராளுமன்றத்தை முடக்கப் போவதாக மிரட்டல் விடுத்தன.

இவற்றையெல்லாம் சரிக்கட்ட பாரதிய ஜனதாவின் செயற்குழு கூட்டம் அவசரமாகக் கூடி என்ன செய்தால் மீண்டும் தமது ஆட்சியை தக்க வைக்க முடியும்....? என்பது போல ஆலோசனை நடத்தியது.

அதன் முடிவு ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்கள் அனைவரும் பதவி விலகிக் கொண்டனர் ஆனால் தமக்கும் ஊழலுக்கும் தொடர்பே இல்லை தொலைகாட்சியில் வெளியிடப்பட்டவை தமது குரலுமல்ல, உருவமுமல்ல என்பது போலவே வாதிட்டனர்.

அத்துடன் மத்தியரசு ஓய்ந்து விடவில்லை. தெஹல்கா ஊழல் விவகாரத்தை விசாரணை செய்வற்கென்று நீதிபதி புக்கான் தலைமையில் குழு ஒன்றையும் நியமித்து தம்மிடமிருந்து ஊழல் விவகாரத்தை அக்குழுவின் தலையில் சுமத்திவிட்டது.

விசாரணை அறிக்கை முடிவில் சட்டப்படி நீதிபதி நடவடிக்கை எடுக்கப்போவதாக கூறியதோடு மத்தியரசு மக்களையும்,எதிர்க் கட்சிகளையும் வாய்மூட வைத்து விட்டதென்னமோ உண்மைதான்.

அத்தோடு மத்தியரசும் தெஹல்கா ஊழல் விவகாரத்தை கிடப்பில் போட்டு விட்டது எனலாம். பாரதிய ஜனதா ஆட்சிப் பீடத்திலிருந்து இறங்கும் வரை நீதிபதி புக்கான் குழு எந்த விதமான அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

அப்படி எனில் வாஜ்பாய் அரசு மக்களையும். எதிர்க்கட்சிகளையும் வரி கட்ட கண்துடைப்புப் போன்றே நீதிபதி புக்கான் குழுவை நியமித்ததா.... எனும் வினா எழாமல் இல்லை.

ஆனால் அன்றைய அசமந்தப் போக்கு இன்று அக்கட்சிக்குப் பலத்த சங்கடத்தைத் தோற்றுவிக்கத் தவறவில்லை இல்லையெனில் 2004 செப்ரெம்பரில் காங்கிரஸ் அரசு தெஹல்கா ஊழல் தொடர்பான விசாரணைக் குழுவைக் கலைக்க நேரிட்டிருக்காது. இன்று தெஹல்கா ஊழல் தொடர்பாக வழக்கைப் பதிவு செய்ய உத்தரவிட்டிருப்பதும் நேர்ந்திருக்க மாட்டாது.

ஆனால் உண்மைகள் பலவும் இருக்கின்றது. வாஜ்பாயின் அரசியல் உண்மையான ஆயுத வியாபாரிகளை இனங்காண தெரியாதவர்கள் தான் அதிகம் இருந்துள்ளனர் என்பதனால்தான் "வெஸ்ட் எண்ட் இன்டர் நேஷனல்" எனும் ஆயுத நிறுவனமாக தெஹல்கா இணையத்தளத்தினால் பாதுகாப்பு வளையத்தினுள் மிக சுலபமாக நுளைய முடிந்திருக்கின்றது.

அதுமட்டுமன்றி அப்போதைய வாஜ்பாய் அரசு, அன்றை ஊழல் விவகார புண்ணைக்கீறிக்கிழித்துப் பார்த்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குப்பதிலாக மூடிமறைக்க முற்பட்டதன் விளைவுதான் மூன்று வருடத்தின் பின்னரும் கூட அந்தப் புண் நாறிக் கொண்டிருக்கின்றது எனலாம்.

மறுபுறம் தெஹல்கா இணையத்தளம் வெளியிட்டவை எல்லாமே பொய் என்று கூறி வாஜ்பாய் அரசு ஏன் தெஹல்கா இணையத்தளம் மீது தகுந்த நடவடிக்கை அப்போது எடுக்கவில்லை என்பதும் தொக்கி நிற்கின்றது.ஏற்கனவே பாரதிய ஜனதாவின் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த சந்திரபாபு நாயுடு ஆந்திரா முதலமைச்சராக இருந்த போது அவரது சொத்துக்கள் குறித்தும் இதே தெஹல்கா இணையத்தளம் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றமையும் கவனிக்கத் தக்கது.

அதனால் தான் வாஜ்பாய் அரசு அன்று மெளனம் சாதித்ததா... என்பதும் சிலவேளை கிழித்தெறியலாம்.

இதேவேளை காங்கிரஸ் அரசு ஏன் தெஹல்கா ஆயுதபேர ஊழலைக் கிளறியுள்ளது என்பதையும் சற்றுச்சிந்திக்கவேண்டும்.

போபர்ஸ் பீரங்கி ஊழல் சுமத்தப்பட்டவர் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி இந்த வழக்கு மலேசியாவில் நடந்து வந்தது. ஆனால் கடந்த வருட இறுதிப பகுதியில் பிரதமர் ராஜிவ்காந்திக்கும் ஊழலுக்கும் தொடர்பில்லை என்று மலேசியா நீதிமன்றம் அறிவித்துவிட்டமை காங்கிரசிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி எனலாம்.

காங்கிரஸ் ஆட்சிப்பீடமேற இதுவும் ஒரு காரணம். ஆனால் வாஜ்பாய் அரசு உண்மையாகவோ....... பொய்யாகவோ....... போபர்ஸ் பீரங்கி ஊழலில் மாட்டி வைத்துவிட்டதுடன் தம்மைப் பழிவாங்கும் விதத்தில் செயற்பட்டதாகக் கருதிய காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தவுடன் பாரதிய ஜனதாவின் தெஹல்கா ஆயுதமே ஊழலை மீண்டும் மக்கள் முன் கொண்டுவருவதோடு பழிதீர்க்க முற்படுவதாகவும் விமர்சிக்கப் படுகின்றது.

ஏனெனில் ஊழல் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மத்தியரசில் பதவிவகிக்கக் கூடாது எனும் பாரதிய ஜனதாவின் ஆட்சேபத்திற்கும், வழக்குப்பதிவு செய்துள்ளமைக்கும் மத்தியரசு விசித்திரமான அதேவேளை விமர்சிக்கக் கூடிய வகையில் மனுத்தாக்கல் செய்திருக்கின்றது எனலாம்.

அதாவது ஊழல் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மத்தியரசில் பதவி வகிப்பதில் தடையில்லை என்று பதில் மனுத்தாக்கல் நீதிமன்றத்தில் செய்திருக்கின்றது.

அப்படி எனில் ஏன் பாரதிய ஜனதாவின் கடந்த கால முடிந்து போன குப்பைகளைக் காங்கிரஸ் இன்று தான் கிளற முற்படுகின்றது.....? என்பது சந்தேகமுள்ள வினாவாகும்.

அது மட்டுமன்றி காங்கிரஸ் அரசும் பழிக்குப்பழி எனும் விதத்தில் மட்டும் தான் இனிவரும் காலங்களிலும் செயற்படப் போகின்றதா....?


பங்காரு ஜெயா ஜோர்ஜ்பெர்ணான்டஸ்

அத்துடன் காங்கிரஸ் அரசு தமக்கு ஒரு நியாயம், எதிர்க்கட்சியான தமக்கு ஒரு நியாயம் என்றே ஆட்சி நடத்துகின்றது எனும் பாரதிய ஜனதாவின் கோஷம் உண்மையாகிக் கொண்டுதான் வருகின்றதா......?

எது எப்படியோ...... அரசியல் என்பது மக்களுக்கானது எனும் உண்மை மாறி தன்னலத்திற்கானது சுயனலத்தின் பொருட்டே செயற்படக் கூடியது எனும் நிலைதான் இந்திய அரசியலில் தலை தூக்கியுள்ளது போலுள்ளது.

என்றாலும் மக்களால் தெரிவு செய்யப்படுபவர்கள் இப்படி தமக்காக அரசியலை வளைப்பது விரும்பத்தக்கதல்ல. இந்த வகையில் பார்க்கும் போது காங்கிரஸ் அரசும் இப்படித்தான் செயற்படப் போகின்றதா..... என்பதை பொறுத்திருந்துதான் காண வேண்டும்.

**அ.கலைவாணி**



கொடிகாமம் மருத்துவமனைக்கு எதிரில் நேற்று முன்தினம் மாலை5.45 மணியளவில்முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வான் ஒன்று நிலை தடுமாறி சாலை ஓரத்தில் இருந்தமின்கம்பத்தில் மோதியதில் மின்கம்பம் இரண்டு துண்டாக உடைந்ததுடன் வானின் முன்பகுதியும் கடும் சேதம் உற்றது இதில் பயணம் செய்த இருவர் எந்தவித காயமும் இன்றி அதிஷ்டவசமாக உயிர்தப்பினர். (படம்.ஆன்சலின்)

# யாழ்.பல்கலைக் கழக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட முடிவு!

-விரிவுரையாளர்,பேராசிரியர்களும் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் மற்றும் கல்வி சார் ஊழியர்கள் எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.**

□யாழ். பல்கலைக்கழக கல்வி சார் ஊழியர்களுக்கான இடர்கால கொடுப்பனவு, கடன் உதவிகள் வழங்கப்படாமை.

□ ஊக்குவிப்புப் படிகள் வழங் கப்படாமை.

□அலுவலகைப்பை வழங் கப்படாமை போன்ற கோரிக் கைகள் உள்ளடங்கலாக பல் கலைக்கழக ஆசிரியர்களுக் குள்ள உரிமைகள் வழங்கப்படா மையைக் கண்டித்து ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் இப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன் தற்பொழுது யாழ். பல்கலைக்கழகத்தில் நடை பெற்று வரும் ஆண்டு இறுதிப் பரீட்சை மேற்பார்வை பணி களிலும் ஈடுபடமறுப்புத் தெரிவித் துள்ளனர்.இதனால், யாழ்பல்கலைக் கழககல்விசார் நடவடிக்கைகள் முற்றாக செயலிழக்கும் அபாயம் தோன்றியிருப்பதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனால்,பல்கலைக்கழக மாண வர்களுக்கு நடத்தப்படும் ஆண்டு இறுதிப்பரீட்சைகள்கூட இடை நிறுத்தப்படும்.இது மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் பெரும் தாக்கங்களை உருவாக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சிறீலங்கா பொலிஸ் நிலையம் குருநகர்ப் பகுதியில் திறப்பு

(நல்லூர்)

குருநகர்,திருநகர் பகுதி மக்க ளிடையே இடம் பெற்றுவரும் கோஷ்டி மோதலை சாதாகமாகப் பயன்படுத்திய பொலிஸார் குரு நகர்ப் பகுதியில் மீண்டும் ஒரு பொலிஸ் நிலையத்தை கடந்த வியாழனன்று திறந்துவைத் துள்ளனர்.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக இப்பகுதியில் கோஷ்டி மோதல் இடம்பெற்றுவருகின்றது. ஏற்கனவே மதத்தலைவர்களி னால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலின் போது வட பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் வணகுரு கடும்நடவடிக்கை எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தார். இதன் ஒரு கட்டமாகவே இப்பொலிஸ் நிலையம் குருநகர் தொடர்மாடி முன்பாக முன்னைய சிறிலங்கா பொலிஸ் பணிமனை இயங்கிய இடத்தில் திறந்துவைக்கப்பட் டுள்ளது. (41)

# 2003 ஆம் ஆண்டு திருமலையில் மூவர் எயிட்ஸ் நோய்க்குள்ளாகினர்

-மாகாண சுகாதார திணைக்கள அதிகாரி

''2002 ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் மூன்று பேர் எயிட்ஸ் நோய்க்கு ஆளானார்கள் 2003 ஆம் ஆண்டில் மேலும் மூவர் எயிட்ஸ் நோய்க்கு ஆளானார்கள் 2004 ஆம் ஆண்டின் புதிதாக எயிட்ஸ் நோய் உள்ளானவரின் எண்ணிக்கை ஆண்டின் முடிவின் பின்னர்தான் வெளியிடப்படும் அதற்கு முன்னர் வெளியிடப்படமாட்டாது" மாகாண சுகாதாரத் திணைக்கள உயரதிகாரி டாக்டர். ஈ.ஜி.ஞான குணாளன் திருகோணமலை நகர மண்டபத்தில் கடந்த புதன் கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திருகோணமலை மாவட் டக்கிளை நடத்தியஉலக எயிட்ஸ் தினத்தையொட்டி மாணவர் களுக்கு நடத்தியகருத் தரங்கில் பேசுகையில் தெரி வித்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாணவர்களின் எயிட்ஸ் தினத்தை யொட்டிய ஊர்வலம் ஒன்று நகரின் பல வீதிகள் ஊடாக சென்று நகரமண்டபத்தை வந்த டைந்தது.நிகழ்வில்யு.என்.எச். சி.ஆர்.திருமலை பிரதிநிதி பிரிட்டா ஹெலலண்ட், யு.என்.எச்.சி.ஆர். திருமலை அதிகாரி செல்வி அருணோதினி அருள்சுப்பிரமணி யம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க திருமலை மாவட்டக் கிளை அதிகாரி மணிவண்ணன் மற்றும் பிரமுகாகள் பங்குபற்றினர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவருமான டாக்டர். ஞானகுணாளன் மேலும் பேசுகை யில்,"உலகிலே 42 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோய்க்குள்ளா கியுள்ளனர். உலகிலே எயிட்ஸ் நோய்க்கு ஆளானவர்களில் அதிகஎண்ணிக்கையானோர் இந்தி யாவில் வாழ்வதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் வடக்குகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 2 இலட்சம் பேர் வாழ்ந்துவருகின்றனர். இலங் கையில் இதுவரை 591பேர் எயிட்ஸ்நோய்க்காளாகியுள்ளனர்" என்று தெரிவித்தார்.நிகழ்வின் நிறைவாக திருகோணமலை மாவட்ட இளைஞர்அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் எயிட்ஸ் நோய்தொடர்பான விழிப்புணர்வை ஊட்டும் வீதி நாடகம் ஒன்று நகர மண்டபமுன்றலில் நடத்தப்பட்டது. (25)

# வைத்தியசாலைகளில் சுகாதார தொண்டர்களாக பணிபுரிவோர் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு

முல்லைத்தீவுமாவட்ட வைத்தி யசாலைகளில் பல ஆண்டுகளாக தொண்டர்காளக் கடமையாற்றிய வர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும்17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சிமாவட்ட பிரதிமாகாண சுகாதாரசேவைகள் பணிமனையில் இடம்பெற வுள்ளது.

மேற்படி நேர்முகத்தேர்வுக்கு பின்வருவேரை தவறாது சமுகம் தருமாறு முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணி மனையினர் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யைச் சேர்ந்தோர்விபரம்.

நாகலிங்கம் தங்கேஸ்வரி, தங்கவேல் இராஜேஸ்வரி, திருமதி.சிவாஜிகணேசன், தயாதர் சினி, புலத்தீசன் ஜெயலலிதா, சதாசிவம் யேகேஸ்வரி, வஸ்தியாம்பிள்ளை அனிஸ்ரா, திருமதி. சாந்தகுமார் சறோசா, திருமதி.யேகேஸ்வரன் சாந்த லேனா, திருமதி. கலைமதி ரமனன், கோபால் பத்மசிறிகாந்தி, சின்னத்துரை மேரிமதலேனா, திருமதி. சகாயநாதன் மேரி இனிற்றா, சுப்பையா மலர்தேவி, சங்கரப்பிள்ளை சாந்தகலா, திருமதி.அழகேஸ்வரன் ஜெய லலிதா,

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந் தோர் விபரம்.

வடிவேல் மஞ்சுளா, குலசே கரம் விமலினி,திருமதி.ஜெய காந்தன் சுதர்சினி, திருமதி. சிவானந்தம் தேன்மொழி, பரமசாமி செல்வரதி, நடேசு யசோதா,சின்னத்துரை சியாமளா, லேகேந்திரன் சிவறஞ் சினி, வரதன் தவச்செல்வி, பென் னையா சசிகலா, பெரியசாமி மஞ்சுளா.

புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலையைச் சேர்ந்தோர் விபரம்.

அருளானந்தம் பரமேஸ்வரி, சுப்பையா வாணி,வசந்தரூபன் தவப் பிரதா, திரேசா சாபுஸபம் மேரிமெக்ரலின்றோஸ், குமாரசாமி பிறேமளாதேவி, திருச்செல்வம் தமிழ்ச்செல்வி, சண்முகம் கலை வாணி, திருமதி.பாஸ்கர் சாந்தினி, திருமதி.அருந்தவராச சாந்தினி, திருமதி.தர்மலவநன் தேவகி, திருமதி. றாஸ்கரன் மஞ்சுளா, தம்பிமுத்து காந்திமதி, சபாசிவம் சிறிவிஜயா, இரம்பியேஸ் விஜிபவானி, சந்திரசேகரம் சந்தான லட்சுமி, திருமதி. கணே சலிங்கம் திருமதி விஜியசிறி.

முல்லைத்தீவு மாவட்டவைத் தியசாலையைச் சேர்ந்தோர் விபரம்.

திருமதிநளினிதேவி சிவகுமார், பாலசிங்கம் உஷாநந்தினி, நாகரத் தினம் கேமநளாயினி, திருமதி. வினோதினி ஜெகதீஸ்வரன்.

மல்லாவியைச் சேர்ந்தோர்.

பத்மாவதி செல்லத்துரை, சத்தியசீலன் நிர்மலா, ஜெயந்தினி கந்தசாமி, மகாலிங்கம் சுகிர்தா, செல்வராச பிரியதர்சினி, வயிரவ நாதன் வளர்மதி, திருமதி தர்ம பாலன் செல்வகுமாரி, சின்னப்பர் சசிகலா, மதிவண்ணன் பிரமிளா, சிறிமேகனதாஸ் கந்தையா, சுப்பிரமணியம் லோகினி, திருமதி. கவிதாசிறிதரன்.

முள்ளியவளை வைத்திய சாலையில் உள்ளோர் விபரம்.

கணபதிப்பிள்ளை பத்மசிறி நட்டாங்கண்டல், கணபதிப்பிள்ளை செல்வரதி, திருமதி. லேகிதாசன் ஜெகராணி.துணுக்காய் சுதர்சினி கணேச பிள்ளை. (20)

# கள்ளுத்தவறணை மோதல் ஒருவர் மூக்கை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறைப் பகுதி கள்ளுத் தவறணை ஒன்றில் கடந்த வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட கைகலப்பில் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள மாதகல் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோர் அகதி முகாமைச்சேர்ந்த க. ஜெயதாசன் (வயது-41) என்பவர் தன் மூக்கை இழந்தார்.

மேற்படி கள்ளுத்தவறணைக்கு கள் அருந்தச் சென்ற பிரஸ்தாப நபருக்கும், அத்தவறணையில் நின்ற வேறு ஒருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.

இக்கைகலப்பில் இருவரும் சண்டை செய்தனர். இதன்போது க.ஜெயதாசனின் பிடியில் வசமாகமாட்டிக்கொண்ட மற்றைய நபர் தன்னை விடுவித்துக் கொள்வதற்காக பிரஸ்தாப நபரது மூக்கை கடித்துத்துப்பினார். கடியுண்டு மூக்கை இழந்த ஜெகதாசன் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுள்ளார். (33)



தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாரதிபுரம் கிராம வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல்லினை கடந்த வியாழனன்று தமிழர்புனர்வாழ்வுக் கழக நிர்வாகப் பணிப்பாளர் வின்சன் நாட்டிவைத்து வீடமைப்புத் திட்டத்தினை ஆரம்பித்துவைப்பதனை படத்தில் காணலாம். (படம்:சோதி)

# நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் முன்பள்ளி அமைக்கக் கோரல்

(தென்மராட்சி)

நாவற்குழி வீடமைப்புத் திட்டத் தில் வசிக்கும் மக்கள் தமது பிள்ளைகள் கல்வி பயில முன் பள்ளி ஒன்றை அமைத்துத்தரும் படி கோரியுள்ளனர்.

தற்பொழுது தற்காலிக வீடொன்றில் 45இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் இயங்கிவரும் இத்தற்காலிக முன்பள்ளிக்கு நிரந்தரமுன்பள்ளிக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தரும்படி இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இங்குள்ள 300 வீடுகளில் தற்பொழுது 150இற்கும் மேற்பட்ட வீடுகளில் மக்கள் மீளக்குடிய மர்ந்த நிலையில் மக்கள் இப்பகுதியில் பல்வேறு அடிப் படைப் பிரச்சினைகளை எதிர் நோக்கி வருவதாக தெரி விக்கப் படுகிறது. (28)

# கூட்டுறவுநகர் திறப்பு

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை மாலை 3 மணியளவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

# வீதிவிபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் ஆலயபின் வீதிப்பகுதியில் கடந்த 9 ஆம் திகதி ஏற்பட்ட துவிச்சக்கர வண்டி-மோட்டார் சைக்கிள் விபத்தில் கல்வியங்காட்டடைச் சேர்ந்த மு.சின்னத்தம்பி(வயது-50) என்பவர் காயமடைந்துள்ளார்.

நல்லூர் பகுதியிலிருந்து யாழ்.நகர் நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்ற பிரஸ்தாப நபர் வீதிக்கு குறுக்கே திடீரென நாய் ஒன்று பாய்ந்ததால் ஏற்பட்ட பதற் றத்தில் எதிரில் வந்துகொண் டிருந்த மோட்டார் சைக்கிளுடன் தான் ஓட்டிச்சென்ற சைக்கிளை மோதிவிட்டதிலேயே இவ்விபத்து ஏற்பட்டது.இவர் யாழ்.வைத்திய சாலையில் சிகிச்சைபெறுகிறார். (33)

மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு,

வடக்கு கிழக்கு மாகாணசபை,

*போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டம் (கார்ப்)*

உள்ளடக்கம் இ.சமுதாய மீளமைப்பும் அபிவிருத்தியும்

*ஆசிய அபிவிருத்தி வங்கி*

*ஆ.அ.வ.கடன் இல: 2043–ஸ்ரீ (எஸ்எவ்)*

# கேள்வி கோரல் - இல. 07

## பாடசாலை மரத்தளபாடங்கள் கொள்வனவு

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்) ஆகுசெலவு சார்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றினை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாடசாலை மரத்தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.

| தொடர் இல. | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | கூறுவிலை பிணைப்பணம் |
|---|---|---|---|
| 01 | கிளி/கார்ப்/ஈடி/15 | 2000/= | 45,000/= |
| 02 | முல்/கார்ப்/ஈடி/20 | 2000/= | 56,000/= |
| 03 | வவு/கார்ப்/ஈடி/16 | 2000/= | 45,000/= |
| 04 | மட்/கார்ப்/ஈடி/03/03 | 2000/= | 33,000/= |
| 05 | அம்/கார்ப்/ஈடி/17 | 2000/= | 62,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்விகள் கோருவதற்கு தகுதிவாய்ந்தவர்களாவார்கள்.

I ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான கேள்விகோருபவர், கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தத்தை திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும் போதியளவு தொகையிலான பாடசாலை மரத்தளபாடங்களை உற்பத்திசெய்யும் ஒரு தச்சுவேலை அல்லது வில் காச்சியொட்டுதல் வேலைத்தளத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக இருக்கவேண்டும். என்பதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்டவேலைகளை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கான சான்றிதழைகொண்டிருத்தல் வேண்டும் இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றார்.

II ஒப்பந்தம் ஒன்றை கையாள்வதற்கு கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் தொழிற்படுத்தல் மூலதனம் உள்ளதென நிரூபிக்க வேண்டும். இதற்கு மாற்றீடாக, கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் கொண்ட தொகையொன்றுக்கு இலங்கையில் உள்ள மதிப்பு வாய்ந்த வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற கடன் வழங்கப்படும் என உத்தரவாதம் பெற்ற கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்தகைய கடன் சான்றானது திட்டப்பணிப்பாளருக்கு விலாசம் இடப்பட்ட கடிதம் என்ற அமைப்பில் இருக்க வேண்டும் என்பதுடன், கேள்வி கோருபவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால், மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு பிரத்தியேகமாக இக்கடனை வழங்கும் என அக்கடிதத்தில் தெளிவாகக்காட்டப்பட வேண்டும்.

III மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

04. ஒப்பந்தகாரர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு கேள்வி கோரலாம். ஆனால் இத்திட்டத்தின் கீழ் ஒரு கேள்வி தாரருக்கு இரு ஒப்பந்தவேலை மட்டுமே வழங்கப்படும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்பத்திரத்தில் இருந்து பெறமுடியும் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலுள்ள திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் தொலைபேசி இல.026-2227434 தொலைநகல்: 026-2227401 மின்னஞ்சல் Necord@slinet lk.

06. கேள்வி ஆவணங்களை 2004 டிசம்பர் 13 ஆம் திகதியிலிருந்து 2004 டிசம்பர் 23 ஆம் திகதி வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து. இது தொடர்பாக பந்தி 2 இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் தலைவர், கருத்திட்ட கேள்விச்சபை NECORD 55, கந்தசாமி கோயில் வீதி திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் குறிப்பிட்ட பிணைப்பணம் அடங்கலாக 2004 டிசம்பர் 30 ஆம் திகதி பிற்பகல் 2.30க்கு முன்பதாக கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும் இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்விதாரர், அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

08. கோள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் 11 இல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணத்தில் இது தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

09 சகல கேள்வி ஆவணங்களுடன் மேலே பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் காட்டப்பட்ட கூறுவிலைப் பிணைப்பணமும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்வி தாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

11. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான மரத்தளபாடங்களின் மாதிரிகளை தகுதிவாய்ந்தவர்களாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வை பார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்கவேண்டும்.

த.லங்காநேசன்,<br>
தலைவர்,<br>
திட்டகேள்விச்சபை,<br>
வடக்கு கிழக்கு சமுதாயமீளமைப்பு<br>
அபிவிருத்தித் திட்டம் (நீ கோட்),<br>
திருகோணமலை.

*(சி-11021)*

# தமிழக மீனவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க! ஜெயலலிதா மன்மோகன்சிங்கிற்கு கடிதம்

இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 13 பேரை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுங்கள் என்று பிரதமர் மன்மோகன்சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது. தமிழக மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாகக் கூறி இலங்கை கடற்படையினர் அவர்களை சிறை பிடித்து செல்வது குறித்தும் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் நான் தங்களின் கவனத்திற்கு பல முறை கொண்டு வந்திருக்கிறேன் .

இந்நிலையில் கடந்த 8.12.2004 அன்று தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஜெகதப்பட்டினம் மீன்பிடித்துறையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 13 இந்திய மீனவர்களை 3 படகுகளுடன் இலங்கை கடற்படையினர் பிடித்து சென்றுள்ளனர்.

தமிழக மீனவர்கள் தங்களின் வாழ்வுக்கு கச்சதீவைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் மீன்பிடிக்கும் தொழிலையே சார்ந்துள்ளனர். இப்பகுதியில் இந்திய மீனவர்கள் தங்களின் வழக்கமான மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் வகையில் அவர்கள் கலாச்சார ரீதியிலான உரிமையையும், சலுகைகளையும் வழங்கி நிலையான ஒரு அமைப்புச் சூழலை உருவாக்க வேண்டும் என்கிற கருத்தை மத்திய அரசுக்கு பல்வேறு தருணங்களில் நான் தெரிவித்த விதத்தை தாங்கள் நினைவு கூறுவீர்கள் என நினைக்கின்றேன்.

கச்சதீவைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதை இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் தடுத்து வருகின்றனர்.இலங்கை கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கையினால் தமிழக மீனவர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்படவாய்ப்பு உண்டாகிறது.

இன்று வரை 46 மீனவர்களும், 101 மீன்பிடிப் படகுகளையும் இலங்கை கடற்படையினர் பிடித்துச் சென்று அவர்கள் வசம் வைத்துள்ளனர். ஆகவே தாங்கள் தனிப்பட்ட முறையில் இப்பிரச்சினையில் தலையிட வேண்டும் என்றும், வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் மூலம் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு இலங்கை கடற்படையினர். நமது மீனவர்களையும், அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க ஆவண செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஜெயலலிதா அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மிகவும் விரும்பத்தக்க நாடு என்ற அந்தஸ்தை இந்தியாவுக்கு வழங்க பாக்.கிடம் கோரியுள்ளோம்

## பிரதமர் மன்மோகன்சிங்

(புதுடில்லி)

மிகவும் விரும்பத்தக்க நாடு அந்தஸ்தை இந்தியாவுக்கு வழங்குமாறு பாகிஸ்தானிடம் கோரியுள்ளோம் என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் வியாழக்கிழமை அவர் கூறியதாவது;

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தானிடம் பேசியுள்ளோம். இந்தியாவுக்கு மிகவும் விரும்பத்தக்க நாடு அந்தஸ்தை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளோம்.

பாகிஸ்தான் வழியாக ஆப்கானிஸ்தானுக்கு இந்திய சரக்குகளை எடுத்துச்செல்ல அனுமதிப்பது குறித்து விவாதித்தோம். இப்பிரச்சினைகள் குறித்து இதுவரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றார் பிரதமர்.


## பருத்தித்துறை பிரதேச சபை -புலோலி சந்தைகள் இறைச்சி கடைகளுக்கான

# மீன் கேள்வி அறிவித்தல் - 2005

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 15 .12.2004 நண்பகல் 12.00 மணிவரை

02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 16.12.2004 முற்பகல் 11.30 மணிவரை

03. கேள்வி திறக்கப்படும் திகதி:- 16.12.2004 பி.ப.2.00 மணி.

04. கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்டவரி 15%சேர்த்து அறவிடப்படும்.

05. மேலதிக விபரங்களை பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

06. கேள்விப்படிவங்களின் ஒரு பிரதி உளளூராட்சி உதவி ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைப்பதுடன் மறுபிரதியை இவ் அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத்தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும்.

| | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப் படாதகேள்வி பத்திர பணம் |
|---|---|---|---|---|
| 01. | மானாண்டி சந்தை | 178200.00 | 5000.00 | 500.00 |
| 02. | பொற்பதி மீன் சந்தை | 50200.00 | 1500.00 | 500.00 |
| 03. | மருதங்கேணி சந்தை | 1980.00 | 500.00 | 250.00 |
| 04. | மந்திகை ஆட்டிறைச்சிக்கடை | 222760.00 | 5000.00 | 500.00 |

சிதம்பரப்பிள்ளை பசுபதி
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை
புலோலி.

பருத்தித்துறை பிரதேச சபை
புலோலி.
08.12.2004

(சி-11022)



# பொது அறிவித்தல்

கமக்கார அமைப்பு புனரமைத்தல் வட்டக்கச்சி.

காலம்:- 17.12.2004
வெள்ளிக்கிழமை D-1 தொடக்கம் D-8 வரை

இடம்:- பாரதி முன்பள்ளி கட்சன் வீதி

நேரம்:- காலை 9.10 FC-9 இருந்து D2வரை
முருகன்கோவில், ஆறுமுகம் வீதி,

நேரம்:- 10.00 - 11.00 வரை D-3 - D-4 கமநலசேவை நிலையம்

நேரம்:- 11.00 - 12.00

தகவல்:-
சி.இராஜேஸ்வரன்
தலைவர்.

(5347)



கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம் பரந்தன் (வ/து)

# அறிவித்தல்

## கிளைக்குழுத் தேர்தல் - 2004

சங்கத்தின் 2004.12.04 கிளைக்குழுத் தெரிவு இடம்பெறாத பின்வரும் கிளைகளின் பொதுக் கூட்டம் 2004.12.18 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

| கிளையின் பெயர் | கிளை இல. | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் இடம்பெறும் இடம்:- |
|---|---|---|
| 01. உமையாள் புரம் | 10 | தலைமை அலுவலகம், க.வ.ப.நோ.கூ. சங்கம், பரந்தன். |
| 02. ஆனையிறவு | 11 | தலைமை அலுவலகம், க.வ.ப.நோ.கூ. சங்கம், பரந்தன். |

செயலாளர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,
பரந்தன்.

(சி-10962)




அமரர் முருகேசன் எழிலரசி

# சாவு அறிவித்தல்

பருத்தித்துறை வீ.எம்.றோட் சந்தியை வசிப்பிடமாகக்கொண்ட முருகேசு- புனிதரத்தினத்தின் அன்பு மகள் முருகேசு எழிலரசிஅவர்கள் 09.12.2004 வியாழக்கிழமை அகாலமரணமானார். அன்னார் காலம் சென்ற முருகேசு, புனிதரத்தினம் ஆகியோரின் பாசமிகு மகளும், இளவரசி, உதயணன் (சுவிஸ்), குமணன் (சுவிஸ்), லச்சுமணன் (லண்டன்), இளவதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஐங்கரதாஸ், குணசேகரன்,சோபனா, சுந்தரி(சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் சந்திரிக்கா, விஜிந்திகா ஆகியோரின் சித்தியும் கிருந்தீஸ், (சுவிஸ்) விபுலாஸ், (சுவிஸ்) ஆகியோரின் அத்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-12-2004 (இன்று) 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி,
வீ.எம்.றோட்,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நா.குணசேகரன்
(மைத்துனர்)

(சி-11023)

## கிளி.மாவட்ட மாவீரர் வெற்றிக்கிண்ண காற்பந்து போட்டிகள் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால் பந்துப் போட்டி நேற்று காலை கிளி.உதய தாரகை மைதானத்தில் ஆரம்பமானது.

நேற்றைய போட்டியில் சந்திரோதயா அணி, விநாயகர் அணியை 2-0 என்ற கோல் எண்ணிக்கையிலும, இளைஞர் வட்ட அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும் வெற்றி பெற்று 4 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

இளைஞர் வட்ட அணி சோலை அணிக்கு எதிராக 2-1 என்றகோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்று 2 புள்ளியையும் லககிஸ்ரார், சென் மேரிஸ் அணிகள் எதிரணியான ஆதவன் அணி சமூகமளிக்காததால் தலா 2 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டன.

விநாயகர், சோலை அணிகளுக்கிடையிலான மற்றுமொருபோட்டிவெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இன்று போட்டிகள் தொடர்ந்து நடைபெறும் மேற்படி போட்டிகளுக்கு க.புவனேந திரராஜா, வே.சிவநேசன், ம.பத்மநாதன், உபேந்திரன், இ.பரஞ்சோதி ஆகியோர் மததியஸ்தர்களாக கடமையாற்றினர்.




## இறுதிப்போட்டி, மூன்றாம் இடத்துக்கானபோட்டிகள் யாழ்.மாவட்டத்தில் இன்று நடைபெறுகின்றது

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் மாவீரர் நினைவு நாளையொட்டி நடத்தப் பட்ட உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் 3 ஆம் இடத்திற்கும் மற்றும் இறுதி ஆட்டமும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நெல் லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத் துறை அரசியல் துறைகளைச் சார்ந்த முக்கிய உறுப்பினர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (41)

## சிசு உதான சாதனையாளர் விருது கிளி.மாவட்டத்திலிருந்து ஐவர் தெரிவு

மக்கள் வங்கியின் சிசு உதான சாதனையாளர் தேசிய விருது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஐந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

டிவானியா நிலூஷினி, மு.தாரணி, துவாரகா, சி.சிந்துஜா, து.கோபி ஆகியோரே மேற்படி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களாவர். அகில இலங்கை ரீதியாக கிடைக்கப்பெற்ற 15980 விண்ணப்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 130 மாவட்ட வெற்றியாளர்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மேற்படி ஐவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விருதுகள் இம் மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 3.45 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் என பிரதம நிறைவேற்று அதிகாரி அசோகாடி சில்வா அறிவித்துள்ளார். (தீ)

## இந்திய அணியின் தலைமையே எதிர்கால இலட்சியம் — ஷேவாக்


இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் ஷேவாக் இவர் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தவர். எதிர்காலத்தில் இந்தி அணியின் தலைவராகுவதே எனது இலட்சியம் என அவர் கூறியுள்ளார்.

கிரிக்கெட்டில் எனக்கு டெண்டுல்கர் தான் ரோல் மாடலாக திகழ்ந்தார். போட்டியின் போது அவர் எனக்கு ஊக்கம் அளிப்பார். டெண்டுல் கர் தலை சிறந்த வீரர். அவர் ஆடும்போது அதை மிகவும் ரசிப்பேன். எனது துடுப் பட்டம் அவரை போலவே அமைய வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அதற்கான முயற்சியிலும் ஈபடுட்டுள்ளேன் என்றார்.

## —டாக்கா டெஸ்ட் கிரிக்கெட் போட்டி—


## சச்சின் சிறப்பு துடுப்பாட்டம்; சாதனை

## சமனானது-வலுவான நிலையில் இந்தியா



இந்திய பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் டாக்காவில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 7 விக்கெட்டுக்களை இழந்து 348 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் நீண்ட இடைவேளைக்கு பின்னர் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காது 159 ஓட்டங்களைப் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தார். இவரை விட கங்குலி 71, ஹம்பீர் 35, லக்ஸ்மன் 32 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர்.




பந்து வீச்சில் பைசியா, றபீக் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பங்களாதேஷ் முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184ஓட்டங்களைப் பெற்றது. இன்று போட்டியின் மூன்றாம் நாள். இதேவேளை பங்களாதேஷ் அணிக்கு எதிராக நேற்று அடித்த சதத்தின் மூலம் டெஸ்ட் போட்டியில் அதிக சதம் அடித்த கவாஸ்கரின் (34சதம்) சாதனையை டெண்டுல்கர் சமன் செய்தார். கவாஸ்கர் 125 டெஸ்டில் விளையாடி, 34 சதம் அடித்திருந்தார். டெண்டுல்கர் 119 டெஸ்டில் 34 சதம் அடித்துள்ளார். வங்களாதேச அணிக்கு எதிரான டெண்டுல்கரின் முதல் சதம் இதுவாகும். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 7 சதமும், இலங்கை, இங்கிலாந்துக்கு எதிராக தலா 6 சதமும், தென்ஆபிரிக்கா, மேற்கிந்தியத் தீவு, நியூசிலாந்து, சிம்பாப்வே ஆகிய அணிகளுக்கு எதிராக தலா 3 சதமும், பாகிஸ்தானுக்கு எதிராக 2 சதமும், வங்களாதேசத்துக்கு எதிராக ஒரு சதமும் அடித்துள்ளார்.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டியில் சேர்த்து டெண்டுல்கர் மொத்தம் 71 செஞ்சரி (ஒரு நாள் போட்டியில் 37) அடித்துள்ளார்.

## ஊக்கமருந்து உட்கொண்டார் கொலின்சுக்கு எட்டு வருட தடை



அமெரிக்காவின் பிரபல உள்நாட்டு 200 மீற்றர் குறுந் தூர ஓட்ட வீராங் கனை மிக்கேல் கொலின்ஸ் எட்டு வருட தடைக்கு உட்பட்டுள்ளார்.

போதைப் பொருள் உட்கொண்டதாக இவ்ரை விசாரணை செய்த அமெரிக்க விளையாட்டுகளுக்கான நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தனது வாழ் நாளில் இவ்வாறு போதைப் பொருள் பாவனைக்குட்படாத இவர் தற்போது போதைப் பொருள் பாவித்த குறத்துக்குள்ளாகியுள்ளார். 33 வயதான கொலின் இதற்கு எவ்வளவு மறுப்புத் தெரிவித்தபோதிலும் நீதிமன்றத் தீர்ப்பே முடிவானது.

அத்துடன் மேலும் 13 பேர் இவ்விவகாரம் தொடர்பாக விசாரிக்கப்படவுள்ளனர். அவர்களுள் உலக சாதனையாளரான மென்கொமரியும் அடங்குவார். இவருக்கான பரிசோதனை வரும் ஜூன் மாதம் நடைபெறும்

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் ஊக்க மருந்துப் பாவனையை ஒழிக்க முடியும் என அமெரிக்க போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

## முதல்தர போட்டிகளில் இருந்தும் அலன் றொனால்ட் ஓய்வுபெற்றார்



தென்னாபிரிக்காவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அலன் றொனால்ட் முதல் தரப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதாகவும் வாவிக்சயர் அணியின் பயிற்றுவிப்பாளராக பதவியேற்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர் 2003ஆம் ஆண்டு சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று மாநில அணிகளுக்காக விளையாட எண்ணினார். எனினும், இவரின் கழுத்தில் காய மேற்பட்டது. பியர் கழக பேச்சாளர் இவரின் வருகை இளைஞர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று கூறியுள்ளார். றொனால்ட் தனது 19 வருட அனுபவத்தில் 330 டெஸ்ட் விக்கெட்டுக்களையும், 1,216 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவர் 1987 முதல் 2000 வரை வார்விக்சய அணிக்காக விளையாடியுள்ளார். 2002ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் போட்டியின்போது காயப்பட்டு ஓய்வில் சென்றார். எனினும் பின்னர் ஒரு நாள் போட்டிகளில் 12 மாதங்கள் பங்கேற்றார்.

## 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் லண்டனில் நடக்குமென நம்பவில்லை


கேட்ஹோய்

2012 ஆம் ஆண்டு லண்டனில் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் என்பதை தான் நம்பவில்லை என இங்கிலாந்தின் முன்னாள் விளையாட்டமைச்சர் கேட்ஹோய் தெரிவித்துள்ளார்.

கூடுதலாக பாரிசில் நடைபெறுவதற்கான வாய்ப்பே இருப்பதாகவும், எனினும் வாக்கெடுப்பில் கலந்துகொள்வோம் என்றும் தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட நாட்களாக ஒலிம்பிக் போட்டியை லண்டனில் நடாத்த தாம் எண்ணியிருந்ததாகவும் ஆனால் நிலைமை சாதகமாக இருக்காது என்றும் தெரிவித்துள்ளார். எனினும் 30 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் செலவழித்து தயார்ப்படுத்தல் மேற் கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவிக்கிறார். இது வீண் விரயமாகாது என தான் நம்பவில்லை. என்றாலும் நாம் விரயமாக்குகிறோம் என்றார்.

ஆயினும் பிரதமர் றொனிபிளேயர் போட்டிகள் நடைபெறும் என உறுதியளிக்கிறார்.

## சிறிலங்காவுக்கெதிரான நியூசிலாந்து அணி அறிவிப்பு

அத்தப்பத்து தலைமையிலான சிறிலங்கா கிரிக்கெட்அணி இம்மாத இறுதியில் நியூலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டியில் விளையாடுகிறது. இதில் பங்குபெறும் சிறிலங்கா அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. நியூலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இரு அணிகள் இடையே முதலில் ஒரு நாள் போட்டி நடக்கிறது. முதல் ஒரு நாள் போட்டி வருகிற 26ஆம் திகதி ஆக்லாந்தில் நடக்கிறது. போட்டி விபரம் டிசம்பர் 26 ஆம் திகதி ஒரு நாள் போட்டி,டிசம்பர் 29ஆம் திகதி 2-வது ஒரு நாள் போட்டி,ஜனவரி 3ஆம் திகதி 3-வது ஒரு நாள் போட்டி,ஜனவரி 4ஆம் திகதி 4ஆவது ஒரு நாள் போட்டி5-வது ஒரு நாள் போட்டி,ஜனவரி 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## மாவட்ட அணியை தெரிவு செய்ய முல்லையில் பயிற்சிப் போட்டி

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட ரீதியாக ஒரு உதைபந்தாட்டக் குழுவையும் ஒரு வலைப்பந்தாட்டக் குழுவையும் தெரிவு செய்வதற்கான பத்து நாள் பயிற்சி புதுக்குடியிருப்பில் நடைபெறவுள் ளதாக கரைதுறைப்பற்று விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் குமார் தெரிவித் தார்.

இதில் கரைதுறைப்பற்றில் மூவர் உதைபந்தாட்டத்தில் தெரிவு செய்யப் பட்டுள்ளதாக தெரிவித்தார். (20)

## லண்டன் அணி கலந்து கொள்ளும் சினேக பூர்வ கால்பந்து போட்டி

புதுக்குடியிருப்பு மாலதி விளை யாட்டு மைதானத்தில் இன்று பி.ப 4.00 மணிக்கு சினேகபூர்வ உதைபந்தாட்ட போட்டி ஒன்று மிகவும் சிறப்பான முறையில் இடம் பெறவுள்ளது.

தமிழீழ விளையாட்டு துறையின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இப் போட்டியில் புதுக்குடியிருப்பு சுப்பராங் அணியை எதிர்த்து லண்டன் தாயகஅணியினர் மோதுகின்றனர். (08)

## யாழ்.பல்கலை கால்பந்து அணிக்கு எதிராக லண்டன் சோபிதன் அணி வெற்றி பெற்றது

லண்டனில் இருந்து வருகை தந்த தாயகத்தைச் சேர்ந்த சோபிதன் உதைபந்தாட்ட அணிக்கும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணிக்கும் இடையே இடம் பெற்ற உதைபந்தாட்டபோட்டியில் சோபிதன் அணி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இப்போட்டி இடம் பெற்றது.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடியமை ரசிகர்களின் பாராட்டைப் பெறக்கூடியதாக இருந்தது.

முதல்பாதி ஆட்டத்தின் போது யாழ்ப்பாண பல்கலைக்கழக அணியினருக்கு கோல்கள் பெறும் பல வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன. ஆனால் இவற்றை இவ் அணியினர் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டனர்.

இதே நேரம் சோபிதன் அணியினர் தடுத்து ஆடுவதிலேயே குறியாக செயற்பட்டுக் கொண்டு இருந்தமையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

முதல் பாதி ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் சமமாக முடி வடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் இரு அணிகளும் கோல்கள் பெறு வதில் மிகவும் அக்கறையுடன் விளையாடினார்கள்.


இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்களை எதிரணிக்கு வழங்கக்கூடாது என்ற அடிப்படையில் விளையாடியதுடன் தாம் தாம் கோல்கள் பெற வேண்டும் என்ற நிலையில் விளையாடினார்கள்.

ஆட்டம் முடிவடைதற்கு சுமார் பத்து நிமிடங்கள் இருக்கும் நிலையில் சோபிதன் அணியினர் முன்னணி வீரர் கண் ணன் தனக்கு கிடைத்த பந்தை சரியான முறையில் பயன்படுத்தி ஒரு கோல் தனது அணிக்காக பெற்றுக் கொண்டார்.

இறுதி பத்து நிமிட ஆட்டமும் மிகவும் விறுவிறுப்பான ஆட்டமாக இருந்தது. ஆட்டம் முடிவில் லண்டன் சோபிதன் அணியினர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியினரை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டனர்.

முதல்பாதி ஆட்டத்தின் போது யாழ்ப் பாணம் பல்கலைக்கழக அணியினருக்கு கோல்கள் பெறும் பல வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன. ஆனால் இவற்றை இவ் அணியினர் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டனர்.

இதே நேரம் சோபிதன் அணியினர் தடுத்து ஆடுவதிலேயே குறியாக செயற்பட்டு கொண்டு இருந்தமையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (41)



## சிந்தனைக்கு

தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலை விதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-12-2004
தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## இது தேவைதானா?

ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட விதம் தொடர்பாகப் பாராளுமன்ற சிறப்புரிமைக்குழு முன் சமுகமளிக்க வேண்டுமென சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டார அறிவித்துள்ளார்.

தி. மகேஸ்வரன் நுவரெலியா மாவட்ட ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு நீதிமன்றம் இரண்டாண்டு தண்டனை வழங்கியதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட விதம்– அதாவது செங்கோலை எடுத்துக்கொண்டு ஓடியது தொடர்பான விவகாரம் தொடர்பாகவே இச் சிறப்புரிமைக்குழு முன் ஆஜராக வேண்டிவந்துள்ளது.

எஸ்.பி.திஸாநாயக்கவிற்காக தி.மகேஸ்வரன் இந்தளவு "உணர்ச்சி வசப்பட்டது'' தேவையான ஒன்றுதானா? என்பது கேள்விக்குரியதொரு விடயமே. ஏனெனில் தி.மகேஸ்வரன் இதனை விடவும் உணர்ச்சிவசப்படக் கூடிய சூழ்நிலைகள், தேவைகள் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் இடம்பெறுவதற்கு நிறையவே வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் தி.மகேஸ்வரன் இவ்வாறு நடந்து கொண்டமைக்குப் பாராளுமன்ற சிறப்புரிமைக்குழு முன் ஆஜராகவேண்டும் எனக் கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சபாநாயகரினால் அறிவிக்கப்பட்டபோதே தி.மகேஸ்வரன் தான் அளவுக்கு மீறிய வகையிலும், தேவையற்ற வகையிலும் "உணர்ச்சி வசப்பட்டதைப" புரிந்து கொண்டிருக்க முடியும்.

தி.மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் கண்ணாடிக்குவளையைத் துக்கி எறிந்த போதும், செங்கோலைத் துக்கிக் கொண்டு ஓடிய போதும் இது சிறிலங்காப் பாராளுமன்றத்தில் வழமையானதும், சாதகமானதொரு நடவடிக்கை எனவும் எண்ணியிருத்தல் கூடும். ஏனெனில் அண்மைக் காலத்தில் இவை போன்ற சம்பவங்கள் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் இடம் பெற்றதுண்டு.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள்நடந்து கொள்ளும் முறை அவர்கள் பிரயோகிக்கும் வார்த்தைகள் காரணமாக பாராளுமன்ற நிகழ்வுகளை நேரடியாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதைத் தடை செய்ய வேண்டிய அளவிற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்டிருந்தமை அண்மைய வரலாறுகள், பௌத்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்கள் கூட அண்மையில் நடந்ததுண்டு.

ஆனால்,செங்கோலைத் துக்கிக் கொண்டு ஓடவும் , கடும் வாக்குவாதத்தில் ஈடுபடவும் சிறிலங்காப் பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை இன உறுப்பினர்களுக்குள்ள உரிமை தி.மகேஸ்வரனுக்கும் உண்டா? என்பதே இங்குள்ள முக்கிய கேள்விகளாகும்.

ஏனெனில் தி.மகேஸ்வரன் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருக்கலாம். ஆனால் அவர் எவ்வேளையிலும் மகிந்தானந்த அலுத்கமகே ஆகிவிடமுடியாது. இவரே சபாநாயகர் தெரிவின் போது செங்கோலைத் துக்கி ஒளித்து வைத்தவர். தான் தமிழர் என்பதை சிலவேளைகளில் தி.மகேஸ்வரன் மறந்து போனாலும் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மறந்து போய்விட மாட்டார்கள். ஆகையினால் பாராளுமன்றத்தில் தி.மகேஸ்வரன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் மனதிற் கொள்ளாமல்– நடந்து கொள்வாரேயானால் இவர் பாராளுமன்றச் சிறப்புரிமைக்குழுவின் முன் ஆஜராவது போன்றவை தவிர்க்கமுடியாததாகவே இருக்கும்.

தி.மகேஸ்வரன் சனாதிபதி சந்திரிகாவையும், அவரது அமைச்சர்களையும் கடுமையாகச் சாடுவதும், குறை கூறுவதும் சனாதிபதிக்கும் அவரது சகாக்களுக்கும் ஆத்திரத்தையும், சீற்றத்தை ஏற்படுத்தலாம். இதனால் அவரைப் பழிதீர்த்துக்கொள்ளும் வகையில் அரசியல் யாப்புக்கு உட்பட்டவகையிலோ அன்றி அதற்குப் புறம்பான வகையிலோ அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முற்படலாம்0 இவை எதிர் பார்க்கத்தக்கவையே.

ஆனால் ஆளும் தரப்பினர் மட்டும் தான் தி.மகேஸ்வரன் மீது அதிருப்தி கொண்டிருப்பார்கள் என்பதற்கில்லை. ஐ.தே.கட்சியினர் கூட தி.மகேஸ்வரன் வியடத்தில் உளப்பூர்வமான நட்பு கொண்டவர்களாக இருப்பார்களா என்பது கேள்வியே. ஏனெனில் தி.மகேஸ்வரன் கொழும்பு மாவட்டத்திற்கான இலங்கைத் தமிழராகப் பிரதிநிதித்துவப்படுத்துதல் என்பது ஐ.தே.க.விற்குக் கூட விருப்பப்பட்டதாக இருக்குமா? என்பது சந்தேகமே.

இந்நிலையில் தி.மகேஸ்வரன் தேவையற்ற விடயத்தில் உணர்ச்சி வசப்பட்டு வில்லங்கங்களைத் தேடிக்கொண்டதாகவே தற்பொழுது கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. மகேஸ்வரனுக்கு இது இன்னும் புரியாமல் இருப்பதற்கு நமது கவலையை மட்டுமே வெளிப்படுத்த முடியும்.

# இசை நிகழ்ச்சிக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய பிக்குகள் மீது பொலிசார் தாக்குதல்

### –ஓபல்பே சோபித்த பா.உ படுகாயம்–

பாராளுமன்ற உறுப்பினர் ஓபல்பே சோபித்த கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சேவைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுளளார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற வன்முறைகளின் போது ஏற்பட்ட காயம் காரணமாக அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய பிரபல திரை நட்சத்திரங்களான சாருக்கான் உட்பட்ட நடிகர்கள் நேற்று கொழும்பில் நடத்திய இசை நிகழ்ச்சியை ஆட்சேபித்து இடம்பெற்ற பேரணியின் மீது பொலிசார் நடத்திய தாக்குதலின் போதே இவர் காயமடைந்தார் இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பில் இது வரை 12 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் இதே நாளில் ரஷ்யாவில் மரணமான சோம தேரரின் ஓராண்டு நினைவு நாளன்று இவ்வாறான நிகழ்வு நடத்தப்படுவதை ஆட் சேபித்து ஜாதிக ஹெல உறுமய போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த போராட்டத்தின்போதே வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. போராட்டத்தில் ஈடுபட்டோர் வாகனங்களுக்கு கல்லெறிந்ததுடன் கட்டடங்களுக்கும் சேதம் விளைவித்ததாக தெரிவிக்கப்பட்டுளளது. (32)

# எஸ்.பி.திஸாநாயக்கவை பார்வையிட அனுமதி மறுப்புக்கு எதிராக உண்ணாவிரதம்

சிறையிலிருக்கும் எஸ்.பி திஸாநாயக்கவை பார்வையிட அவரது உறவினர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஐ.தே.க ஆதரவாளர்களும் அரசியல்வாதிகளும் சிறைச்சாலைக்கு முன்னால் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருப்பதாக அறியவருகிறது.

அடுத்த வாரம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்த விருப்பதாகவும் அதனைத் தொடர்ந்து திஸாநாயக்கவை சிறையில் அடைத்து வைத்திருப்பதை எதிர்த்தும் நாடுதழுவிய போராட்டம் நடத்த ஐ.தே.க. தீர்மானித்திருப்பதாகவும் அறிய வருகிறது

# வெளிநாட்டுத் தூதரகங்களின் பாதுகாப்பிற்கு விசேட திட்டங்கள் அரசால் வகுப்பு

வெளிநாடுகளிலுள்ள இராஜதந்திர தூதரகங்கள் மீது நடத்தப்படும் கெரில்லாத் தாக்குதல்களையடுத்து கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அங்கு பணி புரியும் வெளிநாட்டுப் பணியாளர்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விசேட திட்டத்தின் கீழ் கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களின் பாதுகாப்பையும் பலப்படுத்த சிறிலங்கா அரசு முடிவு செய்துள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அனைத்துத் தூதரகங்களிலும் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன என்றும் முன் அனுமதியின்றித் தூதரகங்களைப் புகைப்படம் எடுப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல தூதரகங்களையும் உள்ளடக்கியதாக பொலிஸ் ரோந்துப் பணியை முடுக்கிவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழன் கொழும்பில் நடைபெற்ற உயர்பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இராஜாங்க அலுவலகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட முக்கிய கூட்டமொன்றிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# வரவு–செலவுத் திட்ட 3–ஆவது மதிப்பீடு நிறைவேறியது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாவது மதிப்பீடு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் 95 அதிகப் படியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

இதன்போது வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து 113 உறுப்பினர்களும், வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து 18 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

ஜாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து வாக்களித்தன. தமிழ்த் தேசிய கூட்டணி உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியினர் வாக்களிப்புக்கு சற்று முன்னதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது எஸ்.பி. திஸாநாயக்க விடுவிக்கப்பட வேண்டுமெனக் கோரி சுலோக அட்டைகளுடன் வாக்களிப்பு முடியும் வரை போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

# சனாதிபதித் தேர்தல் எப்போது? மனு மீதான விசாரணை சனவரியில்

அடுத்த சனாதிபதித் தேர்தல் நடைபெறும் தினத்தை அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக்கொள்ளும் மனு மீதான விசாரணை 2005 சனவரி மாதம் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதுபற்றி ஆராய்ந்த நீதிபதிகள் குழுவொன்று இந்த முடிவுக்கு வந்துள்ளது.

பிரபல சட்டத்தரணியான தர்மதாச கோமஸ் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி மனுவில் தான் ஐ.தே.கட்சி ஆதரவாளர் என்ற வகையிலும் சட்டத்தரணி என்ற வகையிலும் சனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலம் தொடர்பாக எழுந்துள்ள சந்தேகங்களுக்கு தீர்வு காண வேண்டியிருப்பதால் இந்த மனு சமர்ப்பிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். அத்துடன் பிரதிவாதியாக தேர்தல் ஆணையாளரை அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அமைப்பாளராக நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அம்பாந்தோட்ட மாவட்ட கட்சியின் தலைவராக சஜீத் பிரேமதாஸவையும; கண்டிக்கான மாவட்ட தலைவராக கேலியரம்புக் கவலயையும் நியமித்துள்ளார். நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் இந்த தெரிவுகள் இடம் பெற்றன

எஸ் பி திஸாநாயக்கவை விடுவிக்கும் முயற்சிகளின் மத்தியிலேயே கிராம மட்டத்தில் கட்சியின் மீள் ஏற்பாட்டு நடவடிக்கைகளை கருத்திற் கொண்டு இந்த தெரிவுகளை மேற் கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வின் பின்னர் கருத்துரைத்த கேலிய ரம்புக்கவல, கட்சியின் தலைவர் மேற் கொண்டுள்ள இந்த நடவடிக்கை உரிய முறையில் முன்னெடுத்து செல்லப்படும் கட்சியை புனரமைக்கும் நடவடிக்கைளில் தேசிய அமைப்பாளர் எஸ். பி திஸாநாயக்கவின் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப் படும்.

அதன் அடிப்படையில் கட்சி விரைவில் புனரமைக்கப்படும் என்பதில் நம்பிக்கையுண்டு எனத் தெரிவித்தார். (32)

# எந்த ஒரு நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கவும்

# மூன்றாவது நாட்டின் பங்களிப்பு அவசியம்

## பேராதனை பல்கலைப் பேராசிரியர் தெரிவிப்பு

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய சூழ்நிலையில் எந்த ஒரு நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் மூன்றாவது நாட்டின் பங்களிப்பு அவசியமானது என பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார். பாதுகாப்பு ஆய்வு மையம் ஜேர்மனின் ஹான்ஸ் சேய்தல் பௌன்டேஸன் ஆகிய நிறுவனங்கள் சென்னையில் இணைந்து நடத்திய தெற்காசியப் பிரச்சினைகளுக்கு தீர்வும் அமைதிமுயற்சியும் என்ற சர்வதேச கருத்தரங்கில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்; ஒரு நாட்டுக்குள் மோதிக் கொள்ளும் இருதரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு தாமாக முன்வராவிட்டால் மூன்றாவது நாட்டின் தலையீடு அவசியம் எனத் தெரிவித்தார். சில சமயம் அத்தகைய முயற்சி தோல்வி அடைவதும் உண்டு. ஆயினும் இலங்கைப்பிரச்சினையில் நோர்வேயின் முயற்சியால் இதுவரை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர் இடைக்கால நிர்வாகத்திட்டம் தொடர்பாக அதில் தேக்கநிலை உள்ளது எனத் தெரிவித்தார்.

இடைக்காலத் தீர்வுத் திட்டம் பேச்சுவார்த்தையின் இறுதிக் கட்டத்தில் இடம்பெறவேண்டும் என இலங்கை அரசு தனது செயற்றிட்டத்தில் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதுவே பேச்சுவார்த்தையின் தொடக்கமாக அமையவேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ள பேராசிரியர் சமரநாயக்க நோர்வேப் பிரகடனத்தின் அடிப்படையில் உலக நாடுகளின் ஆதரவுடன் பிரச்சினையைத் தீர்ப்பதுவே அரசுக்கும் புலிகளுக்கும் இருக்கும் ஒரே வழி எனத் தெரிவித்துள்ளார். இந்த சென்னைக் கருத்தரங்கில் தெற்காசிய நாடுகளில் உள்நாட்டுப் பிரச்சினைகள் என்ற தலைப்பில் உரையாற்றிய ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியர் சுகதேவ் முனிவ் தெற்காசிய நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளை மூன்றாக வகைப்படுத்தலாம் எனக் குறிப்பிட்டார். காஷ்மீர் நாகலாந்து போன்ற வரலாற்று ரீதியிலான பிரச்சினைகள், நேபாளத்தில் இடம் பெறும் மாக்ஸ்ஸிஸ்ட்டுகளின் கொள்கை ரீதியிலான பிரச்சினைகள் மூன்றாவது தேசிய இனம் அல்லது தனித் தன்மையை நிலைநாட்டும் இலங்கைத் தமிழரின் போராட்டம் என அவர் சுட்டிக் காட்டினார்.

சமூக பொருளாதாரப்பிரச்சனைகளே அடிப்படையாக அமையும். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படர்விட்டால் அவை அரசியல் பிரச்சினைகளாக மாறி பின் தீவிரமடைவதாக தெரிவித்தார். இந்த நிலையில் உலகமயமாதல் சூழ்நிலையில் இத்தகைய பிரச்சினைகளை வெறும் உள்நாட்டுப் பிரச்சினையாகக் கருதிவிடக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார். இலங்கைப் பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்த கல்வி நிலமை குறித்து ஜப்பான் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகங்களின் முன்னாள் பேராசிரியர் சாந்த சீலன் கதிர்காமரும், அமைதிக்கான பேச்சுவார்த்தை, அதன் போக்கு மீண்டும் அமைதி நிலவுவதற்கான வழிவகைகள் குறித்து பத்திரிகையாளர் கே. வெங்கட்ராமன் ஆகியோரும் உரையாற்றியுள்ளனர். (32)

# இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய

# அகதிகளுக்கு இடம்பெயர்சேவை

(செட்டிகுளம்)

இலங்கை இனப்பிரச்சினை காரணமாக பல ஆண்டுகளாக இடம் பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்து விட்டு தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ளவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடமாடும் சேவை ஒன்று நேற்று வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இதன் போது பலநூற்று கணக்கானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அமைப்பு மற்றும் வவுனியா அரச செயலகமும் மேற்படி நிகழ்வினை ஏற்பாடு செய்து இருந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், மரண அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை இவ்வாறு அடிப்படை தேவையான ஆவணங்கள் அனைத்தினையும் இந்த நடமாடும் சேவை மூலம் பெறக்கூடிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அமைப்பின் புள்ளி விபரங்களின் படி இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை 840 குடும்பங்களைச் சேர்ந்த 2439 பேர் இலங்கைக்கு தற்போது வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த எண்ணிக்கை தற்போது இதனையும் விடக் கூட என்று வவுனியா மாவட்ட அரச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு தெரிவிக்கின்றது.

ஆரம்ப நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ வவுனியா ஐ.நா. உயர்ஸ் தானிகராலய வதிவிடப்பிரதிநிதி, திணைகள அதிகாரிகள், கிராம சேவையாளர்கள்,உட்பட பல பிரதி நிதிகள் கலந்து கொண்டனர். யு.என். எச். சி.ஆர். வதிவிடப்பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கும் போது இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்து விட்டு தற்போது நாடு திரும்பியுள்ளவர்களின் அடிப்படை தேவைகளினைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டியது கட்டாய கடமையாகும் என்றும் அவ்வாறான ஒரு நிகழ்வையே யு.என். எச்.சி.ஆர். ஏற்பாடு செய்திருப்பதாக தெரிவித்தார்.

நீண்ட காலமாக இந்தியாவில் தங்கிவிட்டு எந்த விதமான ஆவணங்களும் இல்லாமல் வந்துள்ள தங்களுக்கு இவ்வாறான முறைகள் மூலம் சுலபமாக ஆவணங்களைப் பெற்று தருவதன் மூலமாக நன்மை அடைவதாக நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் கருத்துத் தெரிவித்தனர். (21)

### நாட்டுப்பற்றாளர்....

ஆசிரியராக, பள்ளி முதல்வராக, விரிவுரையாளராக சிறப்புறக் கல்விப் பணியாற்றி ஒய்வு பெற்ற பின்பும். தமிழ்ப் பணியில் ஓய்வின்றி உழைத்தவர். அவர் படைத்த கதை, கவிதை, நாடகம், நாவல் என்பன தமிழ் மக்களிடையே நாட்டுப் பற்றையும், இனபற்றையும் வளர்த்தன. அவர் படைத்த வரலாற்று கட்டுரைகள் மாணவர்களுக்கான இலக்கிய, இலக்கண நூல்கள் கூட மாணவர்களை மொழி இன நாட்டுப் பற்றுள்ளவர்களாக ஆக்கி விடுதலைப் போரின்பால் அவர்களை ஈர்க்கும் வகையில் அமைந்தன. தமிழ் மொழியை உயிரிலும் மேலாக எண்ணிச் செயற்பட்ட அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தமிழீழக் கல்விக் கழகம், தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, கலை பண்பாட்டுக் கழகம் ஆகியவற்றோடு இணைந்து முதுமைக் காலத்திலும் தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் ஆற்றிய பணி அளப்பரியது.

நோய் வாய்ப்பட்டிருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது அரும் பணியாற்றி வந்த அன்னாரின் திடீர் மறைவு எமக்கு பேரதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது. நாட்டுப் பற்றோடு அவர் ஆற்றிய அரும் பணியை நினைவில் நிறுத்தி அன்னாரை நாட்டுப் பற்றாளராக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அறிவிக்கை செய்வதுடன் அவருக்கு இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றது. அன்னாரின் பிரிவால் துடித்து நிற்கும் அவரது பிள்ளைகள், உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத தெரிவித்துக் கொள்கின்றது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

### 10,000..

விசாரணைகள் இடம் பெறுகின்றன.

இந்த விசாரணைகளில் குறிப்பிட்ட குண்டுகளின் தரம் குறைந்தவையாக காணப்பட்டால் அவை திருப்பியனுப்பப்படும் எனத் தெரிவித்தார். (32)

### கிழக்கில்...

இராணுவம் மக்கள் மத்தியில் திணிக்க முற்படுவதாகவும் மட்டக்களப்புஅம்பாறை மாவட்டங்களைப் பொறுத்தவரை தொப்பிக்கலை, தரவை உட்பட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட அனைத்துப் பிரதேசங்களும் தொடர்ந்தும் அவ்வாறே இருந்து வருவதாகவும் தெரிவித்த அவர் சில முஸ்லிம் சகோதரர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக மக்கள் மத்தியில் பேசப்படுவதாகவும் அவ்வாறு இருக்குமானால் அவர்கள் தவிர்த்துக் கொள்வதன் மூலம் தமிழ் முஸ்லிம் உறவுகளை மேலும் வலுப்பெறச் செய்யமுடியுமென்றும் தெரிவித்த கௌசல்யன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்றுவந்த சந்திப்புக்கள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தச் சந்திப்புக்கள் மீண்டும்விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## -அம்பேபிட்டிய கொலை சந்தேகநபர்-

# நீதிமன்ற உத்தரவை மீறி

# தொடர்ந்து வெலிக்கடைச்சிறையில்

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய படுகொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரான பெட்டை நவ்பர் எனப்படும் மொகமட் நசீர் நவ்பர் எந்த சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்து நீதிமன்றம் விசாரணை செய்ய வேண்டியிருப்பதாக கொழும்பு பிரதம நீதிபதி சரோஜினி குசேல விஜயவர்தனா நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சந்தேக நபரை ஏனைய சந்தேக நபர்களுடன் வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்காமல் களுத்துறை சிறைச்சாலையில் வைக்குமாறு ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இருப்பினும் இவர் நீதிமன்ற உத்தரவை மீறும் வகையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து சரத் அம்பே பிட்டியவின் குடும்ப சட்டத்தரணி சந்திரபால குமாரகே நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதனையடுத்தே இவர் எந்த சிறைச்சாலையில் வைக்கப் பட்டிருக்கின்றார் என்பது குறித்து நீதிமன்றம் விசாரணை மேற் கொள்ள இரு ப்பதாகப் பதிலளித்தார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்களும பாதுகாப்பின் நிமித்தம் நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையளர் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி இவர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் 21ம் திகதி வரை நீடித்தார்.


# நாவற்குழியில் மணல் ஏற்றிவந்த

# கன்ரர் ஊர்தி தீக்கிரை

நாவற்குழியில் மணல் ஏற்றிவந்த கன்ரர் வாகனம் இரவு இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டது. வாகனத்தை ஓட்டி வந்த நபரும கடுமையாக தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.நாவற்குழியில் நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் மணல் ஏற்றிவந்த கன்ரர் ரக வாகனம் ஒன்று இனந்தெரியாதோரால் அடித்து உடைக்கப்பட்டு தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது, இச்சம்பவத்தில் இக்கன்ரர் வாகனத்தில் வந்தவர்களும், வாகனச் சாரதியும் இனந்தெரியாதோரால் கடுமையாகத் தாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. இச்சம்பவம் குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (28)

## இருதய வால்வு சத்திர சிகிச்சைக்கு

# உதவுமாறு கோரிக்கை



புதுமாத்தளன் அந்தோனியார் கோவிலடியைச்சேர்ந்த 40 வயதுடைய மாதவன் சிறிக்காந் (மணி) என்பவர் இருதய வால்பு சத்திர சிகிச்சைக்கு உதவுமாறு கோருகிறார். இச்சத்திர சிகிச்சைக்கு நான்கு லட்சத்து எண்பதாயிரம் ரூபா தேவைப் படுகிறது. உதவ முன்வருவோர் புதுக்குடியிருப்பு இலங்கை வங்கிக்கிளையில் 17713 இலக்க கணக்கில் வைப்பிலிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

### பிக்குமாரின்...

குண்டினால் மேடைக்கு சேதம் ஏற்பட்ட போதும் நடிகர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் பார்வையாளர்களில் ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் பலியாகினர் மேலும் 15 பேர் காயமடைந்தனர். குண்டுவெடிப்பையடுத்து நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டது. பாதுகாப்பாக நடிகர்கள் அப்புறப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெருமளவு இராணுவம், பொலிசார் குவிக்கப்பட்ட நிலையிலேயே இந் நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியை நடத்த விடாது தடுக்க உண்ணாவிரதம் தீக்குளிப்பு, மறியல் என பல திட்டங்கள் பிக்குகளால் அறிவிக்கப் பட்டபோதும் நிகழ்ச்சி நடத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்)

### க.பொ.த...

எனவே பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அனை வரும் பாடநேர அட்டவணைக்கு ஏற்ப தங்கள் பரீட்சை நிலையங்களுக்கு சமுகமளித்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அடையாளங்களை உறுதி செய்துகொள்ளும் வண்ணம் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டியுள்ளார். (சோ)

### அம்பாறை...

படையினரின் ரோந்து நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றது. மேலும் இம்மாதம் அம்பாறை அறுகம்குடாவில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையின் உயர் தளபதிகளின் முக்கிய சந்திப்புகள் இரு தடவைகள் நடைபெற்றுள்ளன. சிறிலங்காவில் அதன் காவல்துறையின் சிறப்பு அதிரடிப்படையின் மையமாக அம்பாறை உள்ளது. அதே வேளை அம்பாறையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மட்டுமே உள்ளனர்.

### பருத்தித்துறை..

சகோதரியினது கணவனான குறித்த சந்தேக நபர்களில் ஒருவர் பருத்தித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, பருத்தித்துறை நீதிவானின் வாசஸ்தலத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். இச்சந்தேக நபரை எதிர் வரும் 24 ஆம் திகதிவரை யாழ் சிறையில் தடுத்து வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். இதே வேளை மற்றைய சந்தேக நபரை தடுத்து வைத்துப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.